# களத்தில்

(22.04.1999) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (184) அன்பளிப்பு : 60 p




இலங்கைத் தீவு இன்னும் வன்முறையின் கொப்பரையாக எரிந்து கொண்டிருக்கிறது என்றால், இதற்குக் காரணமாக விளங்குவது சிங்கள பௌத்த இனவாதத்தின் தமிழர் விரோதப் போக்கன்றி வேறு ஒன்றுமல்ல. இனவாத ஒடுக்குமுறையின் வரலாற்று விளைபொருளாகவே தமிழரின் தேசியப் பிரச்சினை பிறப்பெடுத்தது.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

## கிட்டு பீரங்கிப்படை

# தமிழர் பலத்தின் குறியீடு

தமிழீழ விடுதலைப் போரின் இராணுவப் பரிணாமத்தின் நுட்பமான பக்கத்தை புலப்படுத்தும் குறியீடாக தமிழர்களின் பீரங்கிப்படை வளர்ச்சி கண்டுவருகிறது. தமிழரின போரியல் வரலாற்றில 'கிட்டு பீரங்கிப்படை' மற்றுமொரு பரிமாணத்தைப் பிரசவித்துள்ளது.

வன்னிப் பெருநிலப்பரப்பிலே எமது தேசியத் தலைவரின் உருவாக்கத்தில் தமிழர் விடிவிற்கான மரபுவழி இராணுவக் கட்டுமானத்தின் ஒரு பகுதியாக வலுப்பெற்றுவரும் பீரங்கிப் படை சிங்கள இராணுவ விஸ்தரிப்பின் போத தந்திரோபாயங்களிற்கு பலமான தடைகளை இடும் பாத்திரத்தை இன்றைய போரிலே வகிக்கின்றது. கிளிநொச்சிப் பிரதேசத்தை மீட்ட 'ஓயாத அலைகள் 2' நடவடிக்கையிலும் பெரும் படைப் பலத்தினை கொண்டு முயற்சிக்கப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கையான 'ஜெயசுக்குறுய்' நடவடிக்கைக்கு எதிரான போரிலும் தீ மழை பொழிந்த தமிழர் பீரங்கிகள், யாழ். குடாநாட்டின வாசலிலேயே ஆனையிறவு இராணுவ வலயத்தை எரித்து அழித்துவிடும் பலத்துடன் நிற்கின்றன என கொழும்பு பத்திரிகைகளை அலற வைத்தது.

தள்ளாடி இராணுவப் படைத்தளத்தின் மீது துல்லியமாகத் தேர்ந்தெடுத்த இலக்குகளை தாக்கியதன் மூலம் தன் போராற்றலை நிறுவிய தமிழர் பீரங்கிப் படைகள் தமிழர்களின் எதிர்காலப் போக்கால வெற்றிக்கு முதுகெலும்பாய் திகழ உள்ளன. உலகின் 34வது பலம் பொருந்திய இராணுவம் எனக் கூறப்படும் சிறிலங்கா இராணு[வ]த்திற்கெதிரான தமிழர்களது விடுதலைப் போரில தமிழர் பலத்தின் குறியீடாக உருமாறி வரும் பீரங்கிப் படையணி விடுதலைப்போரின் பொருளாதார தேவைகளை மேலும் அதிகரிக்கின்றது. பலம்மிக்க தமிழர் படையணியே தமிழர்களின் முழுமையான வாழ்வுரிமையை மீட்டு எதிர்காலத்திற்கான பலமான பாதுகாப்பான செழுமையான வாழ்வைத் தரும் என்ற அரசியல உண்மையின் அடிப்படையில பலத்தை பிரசவிக்கும் பணிக்கு புலம்பெயர் தமிழர் தம் உழைப்பை வழங்க வேண்டும்.



**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# உண்மை நிலையை உலகுக்கு அறிவிப்போம்

பண்டு தொட்டு பிரித்தானிய காலனித்துவ காலம் வரை இலங்கை என்பது இரண்டு தேசங்களை உள்ளடக்கிய தீவு. பிரித்தானியா; 1833–ல் கோல்புறூக் சீர்திருத்தத்தின் மூலம் தமிழ், சிங்கள அரசுக்களின் எல்லைகளை இணைத்து உருவாக்கிய காலனித்துவ அரசாங்கமே 'சிலோன்' என்ற ஒற்றையாட்சி இலங்கை. 1930–ல் அதே பிரித்தானியா வழங்கிய சனத்தொகை ரீதியான வாக்குரிமை சிறுபான்மையினராகத் தமிழரையும், பெரும்பான்மையினராக சிங்களவர்களையும் மாற்றியது. 1948–ல் பிரித்தானியா வழங்கிய சுதந்திரம் சிங்களவர்கள்; தமிழர்களை சட்டரீதியாக அவர்களது சொந்த தாயகத்திலேயே இரண்டாந்தர பிரஜைகளாக்கும் தன்மையை தோற்றுவித்தது. இதனால் தங்கள் சுதந்திரம் மீளும் எனக் காலனித்துவ பிரித்தானியாவுக்கு எதிராகப் போராடிய தமிழர்கள் மேல் மற்றொரு நவகாலனித்துவ ஆட்சி தோன்ற வழிபிறந்தது.

அந்த நவகாலனித்துவம், பிரித்தானியர் சிறுபான்மையினர்க்கு எதிரான சட்டங்கள் இலங்கைப் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டால் அதற்கு எதிராக பிரித்தானிய மேல் நீதி மன்றத்தில் மேன்முறையீடு செய்யலாம் என்று கொடுத்த அரசியலமைப்பு பாதுகாப்பை தனது பெரும்பான்மைப்பலம் கொண்டு முறியடித்து. 1972 முதல் இலங்கைத் தமிழர்களை நாடற்ற தேசிய இனமாக மாற்றியது. இதனால் இலங்கைத் தமிழர்களின் தலைவரான தந்தை செல்வநாயகம் வரலாற்றுத் தாயகமான தமிழீழத்தை மீளமைக்கும் சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்தை விடுத்தார். அதனை 1977 பொதுத் தேர்தலை குடியொப்பமாக மாற்றுவதன் மூலம் இலங்கைத் தமிழர்கள் அங்கீகரித்தனர். இதன் மூலம் 'தமிழ் மக்கள் தம்மை தமிழீழ மக்களாக அறிவித்து தமது தமிழீழத் தேசத்தை மீள்விக்கும் பயணத்தை ஆரம்பித்தனர். அதனை சிறிலங்கா ஆயுதப்படைகளைப் பயன்படுத்தி நசுக்கும் அல்லாமல் சாதாரண தமிழ் பொதுமக்களை இனஅழிப்பு, இனத்துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்குவதன் மூலம் இனங்காணக் கூடிய அச்சத்தைத் தோற்றுவித்து அவர்களின் அரசியல் பணிவை ஆயுத முனையில் பெற முயன்றனர். இது தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆயுதப் போராட்டமாக மாற்ற வேண்டிய தேவைக்குத் தமிழீழ மக்களைத் தள்ளியது. இது புதிய புலிகள் என்னும் அமைப்பினை 1972ல் தலைவர் பிரபாகரன் தோற்றுவிக்க காரணமாயிற்று. இதன் வளர்ச்சியாக 1976 மே மாதம் 5ம் திகதி புதிய புலிகள் என்னும் அமைப்பு கைவிடப்பட்டு 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்னும் பெயர் கொண்ட தலைவர் பிரபாகரன் தலைமையிலான தேசிய விடுதலை இயக்கம் செயற்படத் தொடங்கியது.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த 23 ஆண்டுகளாக ஒப்புயர்வற்ற தியாகங்கள் மூலமும், தன்னல மறுப்பின் மூலமும் நடாத்திய தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று எத்தனையோ சோதனைகளை, வேதனைகளை எல்லாம் வெற்றியோடு புறங்கண்டு தமிழீழத் தேசத்திற்கு தேசிய பாதுகாப்பு வழங்கும் ஆற்றல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உண்டு என்பதை உலகிற்கு தெட்டத் தெளிவாக இனங்காட்டியுள்ளது. இதனால் ஒரு நாட்டிற்கு இருக்க வேண்டிய அம்சங்களான நாட்டெல்லை–அரசாங்கம்–இறைமை– மக்கள் ஆகிய அனைத்தையும் கொண்டு சிறப்பான நிர்வாக அலகுகளுடன் தமிழீழம் தனியரசாக உருவாகி நிற்கிறது. இந்த உருவாக்கலை தடுக்கும் நோக்கில் சிறிலங்கா தொடர்ச்சியாக பொதுமக்களுக்கு எதிரான யுத்தத்தை நடாத்தி தமிழீழ மக்களை இன அழிப்பு செய்தும், தமிழீழத் தேச உட்கட்டுமானங்களை உருக்குலைத்தும் வருகின்றது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால் மீள்விக்கப்பட்ட தமிழீழத்தின் பாதுகாப்பே இன்றைய பிரச்சினை. சிறிலங்கா பாதுகாப்பை சிதைக்க முயல்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் அதனை தடுத்து தமிழீழ மக்களின் அரசாங்கம் என்ற வகையில் தேசிய பாதுகாப்பை நிலைநாட்டி சிறிலங்காவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழீழ தாயகத்தின் ஏனைய பகுதிகளை மீட்க தொடர்ந்து போராடிவருகின்றனர். இது தான் உண்மை நிலை.




தமிழீழ புலம்பெயர் மக்களாகிய நாம் எமது பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை என்ற நிலையைத் தாண்டிவிட்டது. சிறுபான்மை பெரும்பான்மை பிரச்சினை என்ற கதை முடிந்து விட்டது. தமிழீழ அரசை மீளமைக்கப் போகின்றோம் என்ற கட்டத்தைக் கடந்து தமிழீழ மக்களுக்கு என்று ஒரு 'அரசு நோக்கிய அரசு' படைபலத்துடன் தோன்றிவிட்டது. அந்த அரசால் நிர்வாகத்தையும் பாதுகாப்பையும் தமிழ் மக்களுக்கு வழங்க முடியும். தேசத்தை புனரமைக்க இயலும். சர்வதேச உறவுகளை, வர்த்தகத்தை பேண, உருவாக்கி வளர்க்க முடியும். ஆனால் இவைகளுக்கு எல்லாம் தடையாக இருந்து தமிழீழ மக்களுக்கு தாங்கொணாத் துன்பங்களைக் கொடுப்பது சிறிலங்காவின் ஆக்கிரமிப்பு படைகள். பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான சகல அரசியல் முயற்சிகளும் இந்த சிறிலங்காப் படைகள் விலகினாலே சாத்தியமாகும். இந்த படை கொண்டு தமிழர்களை ஆளும் போக்கே யுத்தத்தை தோற்றுவித்தது. ஆதலால் இந்த படை கொண்டு தமிழர்களை ஆளும் நிலை யுத்தத்தால் விளைந்த விளைவு அல்ல. எனவே படைவிலகல் வேண்டும் என்பது நிபந்தனை விதிப்பாக யாருமே கருதக் கூடாது.

மேலும் துன்புறும் தமிழீழ மக்களுக்கு அவர்களது அவசரமான மனிதத் தேவைகளைக் கணக்கில் கொண்டு சர்வதேச அரசுக்கள்–அமைப்புக்கள் நேரடியான உதவிகளை தமிழீழ மக்களுக்கு 'தமிழர் புனர்வாழ்வு கழகம்' மூலம் செய்ய முன்வர வைக்க வேண்டும். ஒரு அரசாங்கம் தன்னுடைய மக்கள் என்று கூறிக்கொள்பவர்களுக்கு நீண்ட காலமாக பாதுகாப்பையும் அமைதியையும் வழங்க முடியாவிட்டால் அந்த அரசாங்கம் ஆற்றலற்றதாக கணிக்கப்படல் வேண்டும் என்பது ஐக்கிய நாடுகள் சபையின் விதி. எனவே தமிழீழ மக்களை பொறுத்தவரை சிறிலங்கா ஆற்றலற்ற அந்நிய அரசு. எனவே அதன் படைகள் தமிழர் பிரதேசங்களில் ஆக்கிரமிப்பு படைகள். இந்த ஆக்கிரமிப்பு படைகளை விரட்டிட சர்வதேச ஆதரவு நமக்குத் தேவை. இதனை திரட்டுவதும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது சுய பலம் கொண்டு சிறிலங்காப் படைகளை விரட்டுவதற்கான வளங்களை அனுப்பி வைப்பதும் நாம் உண்மையை நிலைபெற வைக்க எடுக்கும் செயற்பாடுகளாக அமைகின்றன.



| | | | | | |
|---|---|---|---|---|---|
| AUSTRALIA<br>TCC<br>P O Box 375,<br>Preston,<br>Victoria 3072. | CANADA<br>WTM<br>64 Eaton Avenue,<br>Toronto,<br>Ontario M4J 2Z8. | DENMARK<br>LTTE<br>P.O Box 47,<br>7400 Herning. | FRANCE<br>TCC<br>341 Rue Des Pyrenees,<br>75020 Paris | GERMANY<br>TCC<br>Postfach 340251,<br>51624 Gummersbach | ITALY<br>TCC<br>Via Vinsenzo Di Pavia No14,<br>90138 Palermo. |
| NETHERLANDS<br>TCC<br>Gr. Hertoginnelaan-106,<br>2517 EL Den Hagg. | NORWAY<br>TCC<br>P.O.BOX 1699 Vika,<br>0110 Oslo | SWITZERLAND<br>WTTC<br>Joses Str - 110,<br>8005 Zurich. | SWEDEN<br>TCC<br>Glomminge Grand-25,<br>3rd Floor,<br>16362 Spanga. | UNITED KINGDOM<br>UTO<br>Eelam House,<br>202 Long Lane,<br>London SE1 4QB. | U.S.A<br>W.T.C.C.<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432 |

# ஈழப்போர் 3

1995ம் ஆண்டு ஏப்ரல் 19ம் நாள் தமிழீழ வரலாற்றில் ஒரு முக்கியமான நாள். சமாதானத்திற்கான யுத்தம் என்ற பெயரில் சந்திரிகா தமிழீழ மக்கள் மேல் 3ஆம் ஈழப்போரை ஆரம்பித்த வரலாற்று நாள். சிங்கள பெளத்த பேரினவாதத்தின் தமிழ் மக்கள் மேலான குண்டு மழைப்பொழிவுக்கு சந்திரிகா இட்ட புதிய பெயர் சமாதானத்திற்கான யுத்தம் என்பது. இந்தப் பெயரீடே சந்திரிகாவின் சமாதானத்தை இராணுவ தந்திரோபாயமாக பயன்படுத்தும் போக்கை நன்கு படம் பிடித்து காட்டியது.

ஆம்! சந்திரிகா ஆட்சிக்கு வந்த பொழுது அவரது உள்ளத்தின் ஆழத்தில் இருந்த நோக்கு, சர்வதேச மட்டத்தில் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு வளர்ந்து வந்த உயர்மதிப்பீடுகளை சிதறடித்து தமிழீழத் தேசத்தின் சர்வதேச அங்கீகாரத்தின் விரைவை தடுத்து நிறுத்தி சிங்கள பெளத்த பேரினவாத ஆக்கிரமிப்பின் வெற்றிக்கு வழிகோல வேண்டும் என்பதே. ஆனால் இதனை செயற்படுத்துவதற்கு நுனி நாக்கில் தேனும் அடிநாக்கில் விசமும் என்ற தத்துவத்தை தனது வழிமுறையாகப் பயன்படுத்தும் புதியதொரு அரசியல் நரித்தந்திரத்தை அவர் கையாண்டார். இந்த நுனி நாக்கில் தேனும் அடி நாக்கில் விசமும் என்ற தத்துவத்தின் மற்றொரு எதிர்பார்ப்பு தமிழ் மக்கள் தனது மயக்கு மொழிகளில் சிக்கி தன் வசம் திரும்புவார்கள் அதனைப் பயன்படுத்தி தமிழ் மக்களையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் தனிமைப்படுத்தல் என்ற தன் நோக்கை பூர்த்தி செய்து தமிழ் மக்களின் தேசிய பாதுகாப்புக்கான ஆற்றலைச் செயலிழக்கப் பண்ணியதன் பின்னர் தமிழ் மக்களை அடிமை கொள்ளலாம் என்பதேயாகும்



# மரபுவழிச்சமரின் பரிணாமம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இதன் பின்னணியில் சமாதானத்திற்கான ஆவலுள்ள சிங்களத் தலைமையாகத் தன்னைச் சித்தரிக்கத் தொடங்கினார். பலம் பொருந்திய சிறிலங்காப் புத்திஜீவிகள் கொண்ட மந்திரி சபை ஒன்றை உருவாக்கி அதன் மூலம் சர்வதேச தீர்மானிப்பாளர்களிடையே தனது அரசாங்கத்தின் கருத்துக்களை ஏற்புடைய முறையில் பரப்புரை செய்வதற்கான பிரச்சார இயந்திரத்தை நிர்மாணித்தார். இந்த பிரச்சார இயந்திரத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் பங்கேற்பதாக உலகிற்கு காட்டுவாரே அதனை ஜனநாயகத் தன்மையானதாக உலகு ஏற்கும் என்பதை உணர்ந்த சந்திரிகா போலித் தமிழ்ப் பிரதிநிதித்துவம் ஒன்றைத் தனது அரசாங்கத்தில் தோற்றுவிக்க முனைந்தார். இது தமிழீழமோ அல்லது தமிழர் தாயகத்தையோ அறியாத கொழும்பு கதிர்காமரின் பதவி ஆசைக்கு தீனி போடுவதாக அமைந்தது. இதன் பின்னர் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முன்னேற்பாடுகள் என்ற நாடகம் ஆரம்பமாகியது. சிங்கள அரசாங்கத்தின் பிரதிநிதிகள் அல்லாத தீர்மானம் எடுக்க முடியாதவர்கள் பேச்சுவார்த்தை நாடகத்தினை முன்னெடுக்க யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இந்தக் கால இடைவெளியைப் பயன்படுத்தி சந்திரிகா தனது படைகளின் பலத்தை அதிகரிப்பதில் ஈடுபட்டார். சண்டைத்தவிர்ப்புக் கண்காணிப்புக் குழுவுக்கு பல நூற்றுக்கணக்கான புகார்கள் தெரிவிக்கப்பட்ட போதிலும் அவை அவற்றை நிவர்த்திக்கும் ஆற்றலற்றதாக காணப்பட்டன. இந்நிலையில் மோதல் தவிர்ப்பைச் சாட்டாக வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் பலரை தாக்கும் செயல்களில் இறங்கிய சிறிலங்கா இராணுவத்தினர் தென்தமிழீழத்தில் சண்டைத்தவிர்ப்பில் ஆயுதப் பிரயோகம் செய்ய முடியாது இருந்த மண்டூர் பொறுப்பாளரை அடித்துக் கொன்ற கோர சம்பவம் சந்திரிகாவின் நோக்கினைத் தெளிவாக்கியது.

தமிழ் மக்களின் மேல் அக்கறையுள்ளவர் போல் சந்திரிகா நடித்தாலும் அவர் பொருளாதாரத் தடையில் இருந்து நீக்கியதாக அறிவித்த பொருட்கள் கூட தமிழர் தாயக பகுதிகளுக்குச் செல்லாதவாறு அவரது இராணுவத்தைக் கொண்டு தடுத்து நிறுத்தினார். தமிழ்ப் பகுதிகளின் புனரமைப்புக்கு திட்டமிடுவது போல் காண்பித்து பெருந்தொகை பணத்தை வழங்கத் தான் தயாராக இருப்பது போல் காட்டி பிற நாடுகளின் பண உதவிகளை உள்வாங்க சந்திரிகா திட்டமிட்டாரே தவிர ஒரு சிறு புனரமைப்பு வேலை கூட இக்கால கட்டத்தில் செயற்படுத்தப்படவில்லை.

இந்நேரத்தில் தமிழ் மக்களின் நாளாந்த வாழ்வுக்கு அச்சுறுத்தலாக இருந்த பூநகரி இராணுவ முகாமை அகற்றும்படி விடுதலைப் புலிகள் விடுத்த கோரிக்கை சந்திரிகா அரசாங்கத்தால் அலட்சியப்படுத்தி சந்திரிகா சமாதான பேச்சுவார்த்தைக்கான முயற்சியை சிறிலங்கா இராணுவத்தின் தயார்படுத்தலுக்கான இராணுவ தந்திரோபாயமாக மாற்றியமை விடுதலைப் புலிகள் காலக்கெடுக்களை விதித்து சமாதான முயற்சிகளை உடன் செய்யுமாறு கேட்க தூண்டியது. இதனை செவிமடுக்காது ஈழப்போர் 3 க்கு சந்திரிகா வித்திட்டார்.

சமாதானத்திற்கான யுத்தம் என்ற பெயரில் தமிழ் மக்கள் மீதான தொடர் யுத்தங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தமிழீழ விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீண்டும் சிறிலங்காவின் இறைமையை நிலைநாட்டுவதே இந்த யுத்தங்களின் நோக்கு. இவ்வாறு தமிழர் தாயகத்தின் மேல் அப்பட்டமான இராணுவ ஆக்கிரமிப்பை ஆரம்பித்து இராணுவ ஆட்சியை கட்டவிழ்த்துவிட்ட சந்திரிகா அதனை மூடி மறைத்து தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இடம்பெறும் ஜனநாயக ஆட்சி ஒன்று அங்கே நடைபெறுவதாக காட்ட தமிழர் தாயகப் பிரதேசங்களில் தேர்தல் நாடகத்தை இராணுவ அடக்கு முறையின் கீழ் அரங்கேற்றினார்.

ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழும் தொகுதிகளில் எட்டு பத்து வாக்குகளை அவர்களையும் கூட இராணுவ அடக்கு முறையின் கீழ் பதிந்து கொண்ட தமிழ்க்குழுக்களை தமிழர்களின் பிரதிநிதிகள் எனச் சந்திரிகா மகுடம் சூட்டி உலக உலாவுக்குத் தன் அரசாங்கத்தின் செலவில் அனுப்பி வைத்தார். சந்திரிகாவின் கிளிப்பிள்ளைகளாக வெளிநாடுகளுக்கு வந்த இந்த போலித் தமிழ்ப் பிரதிநிதிகள் சந்திரிகா சொல்லி விட்டவற்றை சர்வதேச நாடுகளில் ஒப்புவித்துச் சென்றனர். இவர்களுக்குச் சற்றும் சளைக்காதவகையில் சந்திரிகாவின் தமிழ் நாம பூசாரியார் கதிர்காமர் பயங்கரவாதிகள் எனப் புலிகளைப் பிரச்சாரம் செய்யும் கைங்கரியத்தில் இறங்கினார். இந்தப் பிரச்சாரத்தினை இறுக்கமாக்க ஆரம்பத்தில் சந்திரிகாவும் கதிர்காமரும் தமிழீழத் தேசியத் தலைவரைக் குறித்து உயர்ந்த கருத்துக்களை வெளியிட்டு வந்தனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இலங்கைத் தீவின் மூன்றில் இரண்டு பங்கு கடல் பரப்பும் மூன்றில் ஒரு பங்கு நிலப்பரப்பும் இருப்பதாக சந்திரிகா பேட்டி கொடுத்தார். முன்னைய அரசாங்கங்கள் அரசியல் யதார்த்தத்தை ஏற்க மறுத்து வந்ததின் விளைவே போர் என்று வர்ணித்த சந்திரிகா தமிழ் மக்களின் தலைவிதி தன் ஆட்சியில் ஒரு குண்டு கூட விழ விட தான் அனுமதிக்கப் போவதில்லை என குளுரைத்தார். இலங்கையில் தான் உட்பட தமிழர்கள் தலைகுனிந்து வாழ்வதே பிரபாகரனால் எனக் கதிர்காமர் வீர கோசிக்கும் பேட்டி கொடுத்தார். இவ்வாறு எல்லாம் பேசி தங்களை தமிழர்களின் பால் அக்கறையுள்ளவர்களாக காட்டியதன் பின்னரே அதே தங்கள் வாயால் பயங்கரவாதப் பிரச்சாரத்தை இருவரும் ஆரம்பித்தனர். இந்த நிகழ்வுகளைப் பின்னோக்கிப் பார்க்கும் பொழுது சந்திரிகா அரசாங்கம் எவ்வளவு மதிநுட்பமான முறையில் தமிழர்களுக்கு எதிரான தங்கள் இனஅழிப்பு அரசியல் செயற்திட்டத்தை திட்டமிட்டு செயலாற்றினார்கள் எனத் தெரியவருகிறது. ஆனால் இந்த சதியை அன்றே இனங்கண்டு அதனைத் தடுத்து நிறுத்திய மதியுகியாக தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் விளங்குகிறார். இது தான் தமிழீழ மக்களின் இன்றையத் தலைமையின் பெருமை.

தேசியத் தலைவர் எதிர்பார்த்தது போலவே தமிழ் மக்கள் மீது அவர்களை இனஅழிப்பு செய்யும் நோக்கிலான பாரிய யுத்தம் சந்திரிகாவால் 1995 ஏப்ரல் 19 முதல் பலவடிவங்களில் பல குறியீட்டுப் பெயர்களில் நடாத்தப்பட்டு வந்த போதிலும் அவரின் பிரதான நோக்கு நிறைவேறாதவாறு தமிழீழ விடுதலைப் புலிகளால் தோற்கடிக்கப்பட்டு வருகின்றது. இதனால் சிங்களப் படையினரின் பேரிழப்பை சந்திரிகா சந்தித்து வருவதும் அல்லாமல் தமிழீழ விடுதலைப் புலிகள் கைப்பற்றும் சிறிலங்காப் படையினரின் நவீன ஆயுதங்களால் பலம் பொருந்திய மரபுவழி இராணுவமாகவும் தம்மை மாற்றி அமைக்க கூடியதாக உள்ளது.

சூரியக்கதிர் [1995] சத்ஜெய [1996] ஜெயசிக்குறுய் [1997 மே 13] ஆகிய மூன்று மரபு வழிச் சண்டையிலும் சிறிலங்கா அரசாங்கத்தின் நோக்கினை முறியடித்து தமிழீழ விடுதலைப் புலிகள் தமது மரபுவழி இராணுவத் தன்மையை உலகிற்கு வெளிப்படுத்தினர். அதிலும் குறிப்பாக நல்ல நேரம் பார்த்து பூஜைகள் செய்து பிரித் ஓதி பெளத்த பிக்குகள் ஆசீர்வதிக்க பல்லாயிரம் படையினருடன் நவீன ஆயுத பலத்துடன் ஆரம்பித்த ஜெயசிக்குறுய் இனை விடுதலைப் புலிகள் முறியடித்த விதமானது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மரபு வழி இராணுவ அமைப்பின் மூலம் தமிழீழத்திற்கு தேசிய பாதுகாப்பை கொடுக்க முடியும் என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தி தமிழீழம் தனி நாடாக இயங்கும் சகல தகுதிகளுடனும் உள்ளது அதற்கான சர்வதேச அங்கீகாரத்தை வழங்குவதன் மூலம் இலங்கைத்தீவின் ஆயுத முரண்பாட்டினை முடிவுக்கு கொண்டு வரலாம் என்ற எண்ணத்தை சர்வதேச நாடுகளுக்கு ஏற்படுத்தியுள்ளது.

இதனால் இனி தமிழீழ மக்களை இன அழிப்பு செய்து அவர்களின் அரசியல் பணியை பெறும் சிறிலங்காவின் செயல்களை நீண்ட நாட்களுக்கு சர்வதேச நாடுகளும் அமைப்புக்களும் அனுமதிக்க மாட்டாது. விடுதலைப் புலிகள் தம் மரபுவழி இராணுவ ஆற்றலை மீண்டும் நிரூபித்து காட்டுவது புலிகளை அழிப்ப வந்தவர்களை வீட்டுக்கு அனுப்பி வைத்தமை தமிழீழத்தை இனியாராலும் அடைக்க முடியாது என்ற உண்மையை தெட்டத் தெளிவாக்கி விட்டது. சமாதான வேடமிட்டு உலக அங்கீகாரத்தை திசை திருப்ப தொடங்கிய போர், முடிந்து தமிழீழத்தை விடுதலைப் புலிகள் காட்டுவதால் உலக அங்கீகாரம் வேகம் பெறுகிறது. இவ்வாறாக தமிழீழ மக்களையும் தமிழீழத் தேசத்தின் கட்டமைப்புக்களையும் அழித்தொழிக்க சந்திரிகா அரசாங்கம் தொடங்கிய ஈழப்போர் 3 இன்று தமிழீழத் தேசம் ஒன்று இலங்கைத் தீவில் தனியாக உரிய அந்தஸ்துடன் தகுதிகளுடனும் இயங்கிக் கொண்டிருக்கிறது அதனை ஏற்க மறுத்து சிறிலங்கா தமிழீழ மக்கள் மேல் ஆக்கிரமிப்பு செய்கிறது. அதனது படைகளை விலக்க வைப்பதன் மூலமே இலங்கைத் தீவில் அமைதியும் பாதுகாப்பும் தோன்றும் என்ற அரசியல் யதார்த்தத்தை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறது. சந்திரிகா அரசின் தமிழின அழிப்பு நடவடிக்கைகளையெல்லாம் முறியடித்து, வெற்றிகரமான முறையில் தமிழீழத் தேசத் தலைவன் பிரபாகரனின் தலைமையில் மீட்கப்பட்ட நிலையில் உள்ள தமிழீழத்தை பூரண சுதந்திர நாடாக காணும் நாள் வெகு தூரத்தில் இல்லை. இந்த விரைவு நாம் அளிக்கும் நிதிபலத்திலும் நாம் திரட்டும் சர்வதேச ஆதரவிலும் தங்கியுள்ளது.

# யார் "வந்தேறுகுடிகள்"

'சிலோன்' என்று முன்னர் அழைக்கப்பட்ட தீவின் தற்போதைய பெயர் 'சிறீலங்கா.' இந்தப் புதிய பெயர்-1972-ம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட குடியரசு அரசியல் யாப்பின் பிரகாரம்-சூட்டப்பட்டிருந்தது.

போர்த்துக்கேய வர்த்தகர்கள் 16-ம் நூற்றாண்டில் தீவில் காலடி எடுத்துவைத்த பின்னர் வெளியுலகிற்கு இந்தத் தீவு 'சிலோன்' என்ற பெயரிலேயே தெரிந்திருந்தது.

இந்தத்தீவின் சுதேசிகளான தமிழர்களும் சிங்களவர்களும் தீவை-பல்வேறு பெயர்கொண்டு அழைத்தனர்.

தீவின் பழங்குடிகளான தமிழர்கள் தாமிரபரணி என அழைத்தனர். கி.மு. 3-ம் நூற்றாண்டைச் சேர்ந்த அசோகச்சக்கரவர்த்தியின் பாறைக் கல்வெட்டொன்றில் இந்தத்தீவு தாமிரபரணி என்ற தமிழ்ப் பெயர் கொண்டே அழைக்கப்பட்டுள்ளது.

மகா அலெக்சாண்டரின் காலத்தில் கிரேக்க கடற்பயணிகள் தாமிரபரணி என்பதை 'தப்ரபோன்' என உச்சரித்து அதை பெயராக்கினர்.

முன்னைய சமஸ்கிருத காப்பியங்களில் இந்தத்தீவு 'லங்கா' என (சமஸ்கிருத மொழியில்) குறிப்பிடப்பட்டுள்ளது.

கி.பி. முதலாம் நூற்றாண்டில் தாமிரபரணி என்ற பெயர் பாவனையில் இருந்து கைவிடப்பட்டு இலங்கை என்ற புதிய தமிழ்ப் பெயர் உபயோகத்திற்கு வந்தது.

கி.பி. முதலாம்-நான்காம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திய சங்க இலக்கியங்களில் இந்தத்தீவு இலங்கை என்றே அழைக்கப்பட்டுள்ளது.

அப்போதும்சரி - இப்போதும்சரி இந்த தீவிற்கு சிங்கள மொழியில் எந்த ஒரு பெயரும் இருந்ததில்லை.

சிறீலங்கா என்ற தற்போதைய பெயர் சமஸ்கிருதச் சொற்பதமாகும். இதன் பொருள் 'அற்புதமான தீவு' என்பதாகும்.

'சீகல' என்பது தீவிற்குள்ள ஒரேஒரு சிங்களப் பெயர். இது அதிகம் பயன்படுத்தப்படவில்லை. கி.பி. 4ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மகாவம்சத்திலேயே இந்தப் பெயர் இரண்டு இடத்தில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. தீபவம்சத்தில் ஒரேஒரு இடத்தில் மட்டுமே எழுதப்பட்டுள்ளது. இரண்டும் பாளிமொழி நூல்கள்.

பொதுவாக, உபயோகத்திலுள்ள சிங்களப் பெயராக சமஸ்கிருத சொற்பதமான 'லங்கா' என்பதே இருந்து வந்துள்ளது.

சிங்களவரின் வரலாறு விஜயனின் வரலாறுடன் தொடங்குகின்றது. விஜயனையும் அவனது தோழர்களையுமே சிங்களவரின் மூலவர்களாக மகாவம்சம் கூறுகின்றது. இவர்கள் இலங்கைத்தீவிற்கு வரும்போது இங்கே மனிதர்கள் எவரும் வசிக்கவில்லை எனக்கூறி-தீவை சிங்களவரின் உடமையாக்க மகாவம்சம் முனைந்துள்ளது. இதனால், அவர்கள் வரும்போது தீவில் இருந்த பழங்குடிகளான - தமிழர்களின் வழித்தோன்றல்களான - நாகர்களையும், இயக்கர்களையும் மனிதர்கள் அல்ல, அவர்கள் அரை மனிதர்கள் என்று மகாவம்சம் வகைப்படுத்தியுள்ளது.

நாகர்களை பாம்புகள் என்றும் இயக்கர்களை பூதங்கள் என்றும் வர்ணித்துள்ளது.

எனினும் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் (அதாவது கி.மு.1000-100) இந்தத் தீவில் இரண்டு நாக இராச்சியங்கள் இருந்தன என்பது வரலாற்று உண்மை.




முதலாவது இராச்சியம் வடக்கில் இருந்தது. அது நாகதீவு என்று தமிழிலும்-நாகதீப என்று சமஸ்கிருதத்திலும் அழைக்கப்பட்டது.

இரண்டாவது, தென்மேற்கில், களனியில் இருந்தது. இந்த உண்மையை பண்டைய பாளி நூல்கள்கூட வெளிப்படையாகச் சொல்லியுள்ளன. சமஸ்கிருத காப்பியங்களும் இதைப் பதித்துள்ளன.

கி.மு. 6ம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட இராமாயணம் - மகாபாரதம் போன்ற சமஸ்கிருத காவியங்கள் இந்த நாக இராச்சியங்கள் பற்றியும், இந்த இராச்சியங்களை வெற்றிகொண்ட இயக்க மன்னனான இராவணன் பற்றியும் குறிப்பிடுகின்றன.

கிரேக்கப் புவியியலாளரும் - வான சாஸ்திரியுமான கி.பி 2ம் நூற்றாண்டைச் சேர்ந்த பொட்டலமி என்பவர் வடக்கில் இருந்த நாக இராச்சியத்தைத் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கிலுள்ள புத்தளத்திலிருந்து - அனுராதபுரம் ஊடாக கிழக்கிலுள்ள திருகோணமலையை அண்டிய பகுதிவரை அந்த நாகதீவு இராச்சியம் நிலைகொண்டிருந்ததாக எழுதியுள்ளார்.

நாகர்கள் நாகபாம்பு வழிபாட்டைக் கடைப்பிடித்திருந்தனர். இன்றும் கூட வடக்கில் நாகபாம்பிற்கான கோயில்களும் - வழிபாடுகளும் உள்ளன. இதேபோன்று, இயக்கர்கள் பூதங்களை வழிபடுபவர்களாக இருந்தனர். பூதங்கள் அழிப்புச் சக்திகள் என்றும் - அவற்றை வழிபட்டு காணிக்கைகள் கொடுத்து அவற்றைத் திருப்திப்படுத்தவேண்டும் என்று நம்பி வாழ்ந்தனர்.

தமிழர்களான இயக்கர்கள் * எப்படி இருந்தனர் என்றும் பொட்டலமி வர்ணிக்கின்றார்.

'காதுகளில் அணியப்பட்டுள்ள பெரிய ஆபரணங்களால் ஆண்களினதும் - பெண்களினதும் காதுகள் பெரிதாக இருக்கின்றன.'

இந்த கடுக்கன் (காதுத்தோடு) அணியும் வழக்கத்தை இன்றும் எமது சில கிராமங்களிலுள்ள வயோதிபர்களிடம் காணலாம். ஆபரணம் வாங்க வசதியற்றோர் பனையோலையில் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்திருந்தனர்.

சிங்களவரின் வரலாறு புதிர் நிறைந்ததாகவே உள்ளது. இவர்களது வரலாற்றைக் கூறும் சம்பவங்கள் கற்பனையான ஐதீகக் கதைகளாகவே உள்ளன.

விஜயனின் வருகையும் அவ்வாறானதொன்றே என வரலாற்றாய்வாளர்கள் முடிவு கூறியுள்ளனர்.

கௌதம புத்தரும் மூன்று தடவைகள் இலங்கைக்கு வந்ததாக மகாவம்சம் கூறியுள்ளது. இந்தியாவில் அல்லது புத்த மதம் பரவியுள்ள எந்த ஒரு நாட்டிலும், புத்தபிரான் இலங்கைத் தீவுக்கு சென்றுவந்ததாக எழுதப்பட்டிருக்கவில்லை.

இலங்கைக்கு புத்தபிரான் ஏன் வந்தார்? என மகாவம்சம் விளக்கம் கூறுகின்றது.

முதற்தடவை, புத்தபிரான் தெற்கிலுள்ள மகியங்கனைக்கு வந்திருந்தார். அங்கேவந்து இயக்கர்களுக்கு முடிவு கட்டினதாகச் சொல்லப்பட்டுள்ளது.

இரண்டாவது தடவையாக, வடக்கிலுள்ள நாகதீவுக்கு புத்தபிரான் வந்திருந்தார். அங்கே வந்து நாகர்களுக்கு முடிவு கட்டினதாகச் சொல்லப்பட்டுள்ளது.

மூன்றாவதாக, புத்தபிரான் களனிக்கு சென்றதாக சொல்லப்பட்டுள்ளது. (களனியிலும் நாக இராச்சியம் இருந்தது குறிப்பிடத்தக்கது) களனியிலிருந்து அனுராதபுரம் உட்பட சில இடங்களுக்கு அவர் சென்றிருந்தாராம்.

புத்தபிரானின் விஜயம் பற்றிய மகாவம்சத்தின் கூற்று வெறும் கற்பனை என பிரபல சிங்கள தொல்பொருள் ஆய்வாளரான பரண விதான 1960 களில் பகிரங்கமாகக் கூறி, பிக்குகளினதும் பேரினவாதிகளினதும் கண்டனங்களைச் சந்தித்திருந்தார்.

எல்லாளன் - துட்டகைமுனு போரில் தமிழர்களை தெமிளப் பகைவர்களாகவும் விஜயன் புத்தபிரான் வருகை கதைகளுடன் தமிழரின் வழித்தோன்றல்களான இயக்கர், நாகர்களை தெமிளப் பகைவர்களாகவும் மகாவம்சம் சித்தரித்துள்ளது.

இலங்கையின் புராதன தலைநகரான அனுராதபுரத்தை தமிழ் மன்னர்களே தோற்றுவித்திருந்தனர். பௌத்தம் இலங்கையில் பரவிய காலத்தில் தமிழ் ஆட்சியாளர்கள் அனுராதபுரத்தை மையமாகக் கொண்டு ஆண்டுவந்தனர்.

பௌத்தமதத்தை இலங்கைக்குப் பரப்பிய அசோகச்சக்கரவர்த்தியின் மகன் என்று கூறப்படும் மகிந்தன் இலங்கைக்கு வந்தபோது அனுராதபுரத்தை ஆண்ட தேவ நம்பியதீசன் என்பவன் தமிழ்-இந்து மன்னனாகும்.

தேவநம்பியதீசனை ஒரு சிங்கள மன்னன் என்றே சிங்களவர் கூறுகின்றனர். இது தவறு. ஏனெனில் பௌத்தத்தின் வருகைக்குப்பின்பே சிங்கள இனம் உருவாகத் தொடங்கியது.

இந்த தமிழ் மன்னனைத் தொடர்ந்து சேனன் மற்றும் குத்திகன் (கி.மு.177-155) என்ற ஆட்சியாளர்களும் அவர்களைத் தொடர்ந்து எல்லாளனும் (கி.மு 145-101) அனுராதபுரியை தலைநகராகக்கொண்டு ஆண்டனர்.

எல்லாள மன்னனை துட்டகைமுனு வெற்றிகொண்ட பின்னரே அனுராதபுரம், சிங்களமன்னர் பரம்பரையின் கட்டிலாக மாறியது.

சிங்களவரின் இராசதானியாக மாற முன்னர் அனுராதபுரத்தையும் அதன் சுற்றாடலையும் தமிழ் ஆட்சியாளர்களே ஆண்டு வந்தனர் என்பதை மகாவம்சத்தின் 24வது அத்தியாயம் ஏற்றுக்கொண்டுள்ளது.

தமிழ் மன்னர்களுடன் தான் போர் தொடுக்கப்போவதாக தனது தந்தையாரிடம் துட்டகைமுனு கேட்டபோது 'மகாவலிகங்கைக்கு மறுபுறத்தை தமிழர் ஆளட்டும். இந்தப் பக்கத்திலுள்ள இடங்கள் எங்களுக்கு ஆள்வதற்குப் போதுமானவை' என்று தந்தையார் கூறியிருந்தார் என மகாவம்சம் எழுதியுள்ளது. துட்டகைமுனு தந்தையாரின் கருத்தை ஏற்கவில்லை.

மேலும் அது தொடர்கின்றது. துட்டகைமுனுவின் முதற்போர் மகியங்கனையை ஆண்ட குறுநில தமிழ் மன்னனான சதன் என்பவனுடன் நடந்தது. இதன்பின், மகியங்கனையிலிருந்து அனுராதபுரம் வரையுமுள்ள 31 குறுநில தமிழ் மன்னர்களுடன் துட்டகைமுனு போராடி வென்ற பின்னரே எல்லாளனுடன் போரைத் தொடுத்தான் என்று அது விபரித்துள்ளது.

எல்லாளனை வென்றபின் அனுராதபுர இராச்சியத்தில் பாரிய தமிழர் படுகொலையை துட்டகைமுனு செய்வித்திருந்தான். இந்த இனக்கொலையை நினைத்து துட்டகைமுனு மனங்குழம்பியதாகவும் - அவனை புத்தபிக்குகள் தேற்றி, அவன் எந்தத் தவறும் செய்யவில்லை என்று நம்பிக்கையூட்டியதாகவும் மகாவம்சம் கூறுகின்றது.

எல்லாளனின் வீழ்ச்சியைத் தொடர்ந்து ஆயிரம் வருடங்கள் ஈழத் தமிழருக்கு இருண்டயுகமாகவே கழிந்தது. 1214ம் ஆண்டு புதிய யாழ்ப்பாண அரசு மேலெழும்வரை தொடர்ச்சியான ஒரு ஆட்சிவரலாறு ஈழத்தமிழருக்கு இருக்கவில்லை. துட்டகைமுனு செய்த இனக்கொலை இதற்குப் பிரதான காரணம். எனினும் அந்த காலப்பகுதியில் தென்னிந்திய தமிழ் சாம்ராச்சியங்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆட்சி செலுத்தியுள்ளன.

இந்தக் காலத்திலிருந்து இலங்கைத் தீவு இரண்டு இன - மொழி அரசுகளாக திட்டவட்டமாக பிரிந்துவிட்டது. வடக்கு கிழக்கில் தமிழர்களது அரசும் - தெற்கிலும் மேற்கிலும் சிங்களவர்களது அரசும் இருந்தன. இந்த இரண்டு அரசுகளுக்கு நடுவே இருந்த ஊடறுக்க முடியாத அடர்ந்தகாடு இரண்டு அரசுகளையும் பிரித்துவைத்திருந்தது. இந்த இரண்டு அரசுகளும் வேறுபட்ட மொழிகளைப் பேசி வித்தியாசமான மதம் மற்றும் வழக்கங்களை கைக்கொண்டு பிறிம்பான அரசியல் ஆட்சிகளை நடாத்தி வந்தன. இது ஐரோப்பியரின் வருகைவரை தொடர்ந்தது.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



# தமிழீழப் பொருளாதாரத்தில் விவசாயத்தின் பங்களிப்பு

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது அந்த நாட்டில் வாழும் மக்களின் உழைப்பு, முயற்சி அந்த நாட்டின் வளமான நிலம், மூலதனம் என்பவற்றில் தங்கியுள்ளது.

ஆம்... பணமும், நிலமும் இருந்தால் கூட வினைத்திறனுடைய மக்களின் பங்களிப்பு இல்லாவிடில் அங்கு பொருளாதார சுபீட்சத்தை அடைய முடியாது. என்பதை எமது மக்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

வீட்டு முற்றதில் இருந்து கொண்டு வானத்தைப் பார்த்துக் கொட்டாவி விட்டபடி 'எல்லாம் ஈசன் செயல்' என்று வாயைப் பிளந்து கொண்டிருக்கின்ற ஒரு சமூகத்தினால் எப்போதும் பொருளாதார சுதந்திரத்தை கட்டி எழுப்ப முடியாது. அந்நிய சார்புப் பொருளாதாரத்தில் தங்கி வாழும் துர்ப்பாக்கிய நிலையில் வாழ வேண்டிய அவலத்தில் இருந்து எமது மக்கள் விடுபட வேண்டும். அப்பொழுதுதான் எமது சுயசார்புப் பொருளாதாரத்தை நாமே கட்டி எழுப்பமுடியும்.

எமது நாட்டின் பொருளாதார அமைப்பை ஏற்றுமதிப் பொருளாதாரம், சீவனோபாயப் பொருளாதாரம் என்று பிரித்து அவற்றை உயர்த்துவ

**தமிழீழம் ந.அனந்தராஜ்**

தற்கான விவசாய முயற்சிகள் பல்வேறு வழிகளில் பங்களிக்கின்றன.

இந்த வகையில் எமது விவசாயப் பொருளாதாரத்தின் பங்களிப்பு விரிந்து பரந்துபட்ட செயற்பாடுகளைக் கொண்டுள்ளது. அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- ★ நாட்டின் தேசிய வருமானத்தை உயர்த்துதல்
- ★ வேலை வாய்ப்புக்களை அதிகரித்தல்
- ★ போசணைப் பெறுமானத்தைக் கூட்டுதல்
- ★ குடித்தொகைப் பரம்பல்
- ★ சுற்றாடல் பாதுகாப்பு
- ★ சுயதொழில் வழங்கல்

என்பன போன்ற வழிகளில் விவசாயம் எமது நாட்டின் பொருண்மிய வளர்ச்சியில் பெரும் பங்காற்றுகின்றது.

## தேசிய வருமானத்தை உயர்த்துதல்

எமது பிரதேசத்தின் பிரதான தொழில் முயற்சி கடற்தொழில், விவசாயம் என்பனவாகும் இந்த நிலையில் எமது நாட்டின் தேசிய வருமானத்தில் 35 சதவீதத்திற்கு கூடுதலான பகுதி விவசாயத்தின் மூலமே மேற்கொள்ளப் படுகின்றது. ஒரு நாட்டின் உற்பத்தி கூடும் போது அது தொடர்பாக கிடைக்கும் வருமானத்தின் அளவும் கூடும் எனவே தரிசாகக் கிடக்கும் ஒவ்வொரு நிலத் துண்டையும் விவசாய உற்பத்தியை அதிகரிக்கவேண்டும்.

## வேலைவாய்ப்புக்களை வழங்கல்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

தமிழீழத்தில் உழைக்கும் வலு உள்ளவர்களின் 32வீத அளவினரே விவசாய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். முழு இலங்கையிலும் இது 57 வீதமாகும். நேரடியாக விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களை விட, ஒழுங்கமைக்காத விவசாய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோர் 9 வீதமாகும். இவர்களில் விவசாயத்தைச் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுளோரும், இதில் அடங்குவர் இந்த ஒழுங்கமைக்கப் படாத பிரிவினர் என்பது பின்வருவோரைக் குறிக்கும்.

- ★ நாற்றுமேடை உற்பத்தியாளர்
- ★ நாற்றுக்கள் விற்பனை செய்வோர்
- ★ மரக்கறி வியாபாரிகள்
- ★ கால்நடை உற்பத்திப் பொருட்கள் விற்பனையாளர்
- ★ உபகரணங்களையும் சேவைகளையும் வழங்குவோர்

இவர்களை விட பகுதி நேர விவசாயத் தொழிலில் ஈடுபடுவோரும் உள்ளனர் இந்த எண்ணிக்கையானது எமது பகுதி விவசாய நிலத்தின் அளவு, மக்கள் தொகையுடன் ஒப்பிடும் பொழுது மிகக் குறைவாகவே உள்ளதால் வேலை வாய்ப்புக்கள் இல்லை என்று சொல்வோரும் அதிகமாக இங்கு உலாவருவது கவலைக்குரியது.

எனவே அதிகளவில் வேலைவாய்ப்புக்களை வழங்கக்கூடிய வகையில் விவசாய உற்பத்தியையும் அதிகரித்து எமது பொருளாதாரத்தை உயர்த்த முன்வரவேண்டும்.

## போசணைப் பெறுமானத்தை உயர்த்துதல்

நாட்டின் போசணைப் பெறுமான உயர்வு நல்ல சுகதேகிகளை உருவாக்குவதுடன், வினைத்திறனுள்ள பிரஜைகளையும் உருவாக்கும் அறிவு வளர்ச்சிகுறைதல் போன்றனவும் காணப்படுகின்றன எனவே எமது மக்களுக்குத் தேவையான புரதத்தையும் ஏனைய போசணைப் பொருட்களையும் பெற்றுக் கொள்ளக் கூடிய விவசாய உற்பத்திப் பொருட்களை நாமே உற்பத்தி செய்தல்வேண்டும். இவற்றை விட பால், இறைச்சி, முட்டை போன்றவற்றை எமது பகுதிகளிலேயே உற்பத்திசெய்துகொள்ள முடியும்.




ஒருவர் நல்ல சுகதேகியாகவும், உடல் வலு உள்ளவராகவும் வாழ்வதற்கு தலா புரத நுகர்வுச் சதவீதம் 1.82 கிலோகிராம் என சிபார்சு செய்யப்பட்டுள்ளது. ஆனால் எமது நாட்டின் புரத அளவு 1.36 கிலோகிராம் என வைத்திய ஆராய்ச்சிகள் புலப்படுத்துகின்றன. எனவே புரதக் குறைபாடு பொதுவாகக் காணப்படுவதை எமது மக்களில் இலகுவாக அவதானிக்கலாம். இதனால் குவாசியக்கோர், மரஸ்மஸ் போன்ற நோய்களும், உடல் ஆரோக்கியமின்மை

ஒரு வீட்டிற்கு பத்துக் கோழிகள் வளர்ப்பதன் மூலமும் ஒரு ஆடு வளர்ப்பதன் மூலமும் கூட ஒரு குடும்பத்தின் புரதத்தேவையை நிறைவு செய்து கொள்ளமுடியும். இவற்றை விட எமது பகுதியில் பயிரிடக் கூடிய பயற்றை, சோயா அவரை, உழுந்து, போஞ்சி, மரமுந்திரிகை போன்றவற்றை சிரமமின்றிப் பயிரிட்டு எமது மக்களின் போசணைப் பெறுமானத்தை உயர்த்த முடியும்.

மிகுதி அடுத்த இதழ்

# சாதனைகளின் ஊற்றுக்கண் - மேஜர் கனீபா

சாதிக்கவேண்டும் என்பதன்றி வேறு சிந்தனைகள் அவளிடம் இருக்கவில்லை. ஓயாத அலைகள் 02 இன் போது தனக்குரிய பகுதியை நிச்சயமாகப் பிடிப்பேன், சண்டையில் இரண்டு அதிகாரிகளைப் பிடித்து போனமுறை (1998-02-01இல்) உள்ளே வந்து வீரச்சாவடைந்தவர்களை என்ன செய்தீர்கள் என்று கேட்பேன் என்று தான சண்டை தொடங்கும் வரை சொல்லிக் கொண்டிருந்தாள்.

சண்டையின் போதான அவளின் அணியின் நகர்வு இலகுவாக இருக்கவில்லை ஒரு கட்டடக் காடாக இருந்த பெருந்தளத்தை நெருங்குவதற்காய் ஆங்காங்கே சில மரங்களை கொண்ட நீண்ட வயல் வெளியை எதிரியின் கண்காணிப்பு நிலைகள், அவதானிப்புக் கோபுரங்கள் என்பவை அறியாதவாறு மிக்க கவனமாகக் கடந்து வரிசை வரிசையாக அமைக்கப் பட்டிருந்த முட்கம்பி வேலிகளை சுருள்கம்பிவலைகளை கண்ணிவெடிகளை அகற்றி சூடுகளை வழங்கியவாறு மண்அணையிருந்த வேலியைப் பிரித்து அதன் பின்னிருந்த முட்கம்பி வேலிகளையும் வெட்டி அதன் வழியாக உள்நுழைந்து வலமும் இடமும் மிக நெருக்கமாக அமைக்கப் பட்டிருந்த காவலரண்களை அல்ல காவற்கோட்டைகளைக் கைப்பற்றிக் கொண்டுபோய் சண்டை மிகவும் உக்கிரமாகவே நடந்தது கனீபாவால் கைப்பற்றப்பட்ட காவலரண்கள் கரடிப்போக்குச் சந்தியில் இருந்து உருத்திரபுரம் போகும் பிரதான சந்தியில் வீதியுடன் அமைந்திருந்ததால் நகரப் பகுதிக்குப் போகும் இராணுவப் பின்னடைவுகளைத் தவிர்க்கும் நோக்குடன் இழந்த காவலரண்களை மீளக் கைப்பற்றுவதில் படையினர் [illegible] முயன்றனர். கைப்பற்றிய பகுதியை தக்கவைக்க கனீபாவின் அணியும் உக்கிரமாகப் போராடியது தமது தளத்தைப் பாதுகாப்பதற்காக ஏற்கனவே பலமான நிலைகளை அமைத்து ஆயுத ஆள் பலத்தை குவித்து வைத்திருந்த படையினருக்கும் குறிப்பிட்டளவு ஆயுத தளவாடங்களுடன் உட்புகுந்த கனீபா அணியினருக்குமிடையே நடந்த கடுமையான சண்டையில் கனீபாவின் அணி அதிக இழப்புகளைச் சந்தித்தது உதவிக்கெனப்போன சிறு அணியும் இழப்புகளைச் சந்திக்க, படையினர் கடும் முயற்சியின் பின் தமது பழைய நிலைகளைப் பிடித்துக்கொள்ள, எஞ்சிய ஒரு சிலருடனும் வீரச்சாவடைந்தவர்களின் உடல்கள் ஆயுதங்களுடனும் கனீபா எதிரியின் காவல்வேலிக்கு உள்ளே

[illegible] சூழ பரவலாக நடந்த சண்டையில் ஏனைய பகுதிகள் எம்மால் கைப்பற்றப்பட்டு துடைத்து அழிக்கப்பட்டுக்கொண்டிருக்க, ஒரு சிறு பொறிக்குள் கனீபா தனித்துப் போராடினாள் ஒருபகுதியை உடைத்துக் கொண்டு எஞ்சியவர்களுடன் தப்பி வருமாறு அறிவிக்கப்பட்டபோது வீரச்சாவடைந்தவர்களையும் அவர்களது ஆயுதங்களையும் விட்டு வெளியேற மறுத்துவிட்டாள் காயப்பட்ட போராளிகளை வெளியேற்றியபின்னர், தன்னுடன் எஞ்சியிருந்த ஒரு சிலரையும் வெளியேறுமாறு பணித்தாள் அவர்கள் கனீபாவைத் தனித்துவிட்டு வெளியேற மறுக்க அவர்களை நெருங்கியவாறு நான்கு புறமும் இராணுவம் சூழத் தொடங்க, நிலைமையைக்கூறி இலக்குகளைக் குறிப்பிட்டு தங்களைப் பொருட்படுத்தாது எறிகணைகளை ஏவுமாறு அறிவித்தாள். வீரம் நிறைந்த அந்தச் சண்டையில் கனீபாவை நாங்கள் இழந்தோம்.

மட்டக்களப்பிலே எமது அமைப்புக்கு ஆதரவான குடும்பமொன்றிலே பிறந்த கனீபா 1990ன் ஆரம்பத்திலே அங்கிருந்து காடுமேடெல்லாம் கடந்து, இராணுவச் சுற்றிவளைப்புகளிலிருந்து தப்பி கால்நடையாக வன்னிக்கு வந்து 07 வது பயிற்சி முகாமிலே தன் பயிற்சியை ஆரம்பித்தபோது அவள் சின்னவள். பயிற்சி முகாம்களிலும் வேறு சந்தர்ப்பங்களிலும் தனக்கு விருப்பமான 'காகங்களே காகங்களே காட்டுக்கு போவீர்களா' அவள் ஆடும் நடனம் எல்லோருக்குமே விருப்பமானது யார் மீதும் கோபப்படாத அவள் மீது யாரும் கோபப்படுவதில்லை.

சரியான பகிடிக்காரி ஒரு வால் முளைக்காத குறை என்றாள் அவளோடு நீண்ட காலம் ஒன்றாக நின்ற ஒருத்தி ஆனையிறவுப் பகுதியில் எதிரியின் பலவேகய 2 இற்கான எதிர் நடவடிக்கையின் போது எம்மவர்களால் எதிரியின் அவ்ரோ விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது வீழ்ந்துகொண்டிருந்த விமானத்தை தன்னுடைய அணி வீழ்த்தி விட்டதாக களத்தின் வேறொரு மூலையில் நின்ற தன் தோழிகளுக்கு தொலைத்தொடர்பு சாதனம் மூலம் அறிவிக்க எல்லோரும் நம்பிவிட்டார்கள் பிறகுதான் உண்மை தெரிந்து தாங்கள் ஏமாந்தது புரிந்து சிரித்தார்கள் எந்தச் சண்டையின் போதுமே அவள் தனது பகிடிக்குணத்தை கைவிட்டதில்லை

எட்டு வருடங்களின் முன் பலாலியைச் சூழவிருந்த காவலரண்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையானவற்றை மிகுந்த நம்பிக்கையோடு தலைவர் எமது படையணியிடம் தனித்துவமாகப் பொறுப்புக் கொடுத்திருந்த காலப்பகுதியில் தான், [illegible] எமது இப்போதைய வளர்ச்சிநிலையின் அத்திவாரம் பலமாக அமைக்கப்பட்டது அந்த நேரத்தில் வழிமறிப்புச் சண்டை அனுபவம் சிறிதுமற்ற ஆனால் மனஉறுதியில் நம்பிக்கைவைத்த நிலையில் தான் எமது படையணி இன்றைய சூழ்நிலையை எதிர்கொண்டது ஆரம்பத்தில் மிகநெருக்கமாக அமைந்திருந்த கட்டடங்களிற்கிடையேயும் வாழைத் தோட்டங்களிடையேயும் [illegible] காவற் கடமையில் நின்றதும், படையினரும் இவர்களின் பக்கமாகவே அதிக தொல்லைகள் கொடுத்ததும், குறிப்பிட்ட காலத்தின்பின் நிலைமை வேறு விதமாகி படையினர் இவர்களின் பக்கம் தலையைக் காட்டத் தயங்கியது [illegible] இன்றுவரை தக்க வைத்துக்கொள்வதையும் கனீபா இடையிடையில் தன் பழைய தோழியருடன் இரைமீட்டுக் கொள்வாள்.

1990, 1991 இலே பலாலியைச் சூழவிருந்த காவலரண் பகுதியிலே அவ்வப் போது நடந்த சண்டைகள், ஆகாய கடல் வெளிச்சமர், பலவேகய I, II, கட்டைக்காடு மினிமுகாம் தகர்ப்பு, தொண்டைமானாற்றில் இருந்து [illegible] வரையிலான [illegible] காவலரண்கள் அழிப்பு என்பவற்றில் பங்கு கொண்ட பின் இராணுவ அதிகாரியாகப் பயிற்சி அளிக்கப்பட்டு சண்டைகளுக்கான பயிற்சி ஆசிரியராக [illegible] அதிகாரிகள் பயிற்சியின்போதான நாடகம் ஒன்று இன்றும் நெஞ்சில் நிழலாடுவதைக் குறிப்பிடலாம்.

கலை நிகழ்வொன்று [illegible] பெண் போராளிகளும் ஆண் போராளிகளும் போட்டியாக நிகழ்ச்சி தயாரிப்பார்கள் தொடர் வகுப்புகளுக்கும் பயிற்சிகளுக்கும் இடையில் கிடைக்கும் சிறு ஓய்வின்போது அவசர அவசரமாக தயாரித்து சில வேளைகளில் கடைசி ஒத்திகை கூடச் செய்யாமல் மேடையேறி, ஆனால் தரம் குறையாமல் சமாளித்து அசத்திவிடுவார்கள்.

அன்று அப்படித்தான் நாடகம் அரங்கேறியது சும்மா ஒருமுறை செய்து பார்த்துவிட்டு மேடையேறும் போது தான் அவரவர் கற்பனைக்கு ஏற்றவாறு ஒப்பனை செய்து கொண்டனர் அவர்களின் திட்டப்படி ஒரு கள்ளுக் கடையை முதலாளி திறக்கும் காட்சியுடன் நாடகம் ஆரம்பமாகும் கனீபா தான் முதலாளி மேடையிலே திரை விலகியது மேசையொன்றிலே வெள்ளைத்திரவம் நிரப்பப்பட்ட போத்தல்களைக்கண்டு நாடகக்கோஷ்டியே திகைத்துப்போனது கனீபா உண்மையாக கள்ளை நிரப்பினாளோ, சவர்க்



**போராளியின் குருதிச்சுவடுகள்**

காரத்தை கரைத்து நிரப்பினாளோ என்ற அச்சத்திலேயே குடிப்பதுபோல நடிக்க வேண்டியவர்களுக்கு [illegible] திரை விலகிய பின்னும் கனீபாவை மேடையில் காணவில்லை பார்வையாளருக்கு நடுவே இருந்து கனீபாவின் சின்ன உருவம் [illegible] கையில் [illegible] சாம்பிராணிக் குச்சியுடன் வந்து தான் மேடையேறியது போத்தல்களைச் சுற்றிச்சுற்றி சாம்பிராணிப்

**மலைமகள்**

புகை காட்டிய கனீபா [illegible]

இருக்கின்றது.

மேஜர் மதனா, மேஜர் தாரணி இருவரும் கனீபாவின் சக பயிற்சி ஆசிரியர்கள் அப்போது சண்டைக்கான மாதிரிப் பயிற்சி ஒன்று நடந்து கொண்டிருந்தது நடந்த இடம் ஒரு பெரிய இராணுவத் தளத்தின் அமைப்பு பகலில் தொடங்கும் பயிற்சி நள்ளிரவு வரையும் தொடரும் அதன் பின்னர்தான் எல்லோரும் நீண்ட தொலைவில் உள்ள தங்குமிடத்துக்கு நடந்து வந்து சேர்ந்து ஆயுதம் துப்பரவு செய்து குளித்துவிட்டுப் படுப்பார்கள் அன்றிரவு பயிற்சி முடியத் தாமதமாகிவிட்டது பயிற்சியாளர்கள் வந்துவிட்டார்கள் இவர்கள் மூவரையும் காணோம் [illegible]

[illegible]

தொடர்ச்சி 7ம் பக்கம்



# ஐ.நா ஆணைக்குழு முன் சிறீலங்கா மீது குற்றச்சாட்டு !

ஐ.நா.வின் 55வது மனித உரிமை ஆணைக் குழு தொடர்ந்து ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவ் ஆணைக் குழுவில் தமிழீழ மக்கள் மீதான சிறீலங்கா அரசின் பயங்கரவாத செயல்களை பல நாடுகளைச் சார்ந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs) ஆதாரங்களுடன் குற்றம் சாட்டிவருகின்றனர். அத்துடன் ஐரோப்பிய நாடுகள் சார்பில் ஜெர்மனி, அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகள் இலங்கைத் தீவில் நடை பெறும் மனித உரிமைகள் பற்றி தமது நிலைகளை இவ் ஆணைக் குழுவிற்கு எடுத்துரைத்தார்கள்.

இவ் ஆணைக் குழுவில், "சர்வதேச ஜனநாயக வழக்கறிஞர்கள்" சார்பில் கலந்து கொண்ட திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் சிறிலங்கா அரசின் தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்களை மிகவும் கடுமையாக கண்டித்து உரையாற்றினார். அவர் கூறியதாவது.

சிறிலங்கா பாராளுமன்றத்தில் 1983ம் ஆண்டு ஆவணி மாதம் அரசியல் யாப்பின் 6வது சரம், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் சமூகமளிக்காத வேளையிலேயே இடம்பெற்றது என்றும் இது உலகுக்கு ஓர் வேடிக்கையான செயலாக இருந்தது என்றும், கடந்த காலங்களில் பேச்சு சுதந்திரம் கேள்விக்குறியாகவுள்ளதாகவும், அண்மைக் காலங்களில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் இவற்றை நிரூபிக்கின்றன என்றும் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது, செம்மணியில் நாநூறு பேர் வரையில் புதைக்கப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டு இப்போது ஒன்பது மாதங்களாகியும், இது வரையிலும் இவ்விவகாரத்தில் சம்மந்தப்பட்டுள்ள ராஜபக்சா என்னும் இராணுவச்சிப்பாயை செம்மணிக்கு எடுத்து சென்று சரியான புதைகுழி உள்ள இடத்தை கண்டு பிடிக்க சிறிலங்கா அரசு முன்வர வில்லை என்றும், இது இப்போது ஓர் சர்வதேச விவகாரமாக உள்ளதை திரு. குமார் பொன்னம்பலம் இவ் வாணைக்குழுவிற்கு சுட்டிக் காட்டினார்.

அதனைத் தொடர்ந்து "சர்வதேச சோசலிச பெண்கள்" சார்பில் உரையாற்றிய திருமதி காரின் கூறியதாவது தமிழீழத்தில் பெண்கள் சிறிலங்கா இராணுவத்தி

## சுட்டி

னால் கைது செய்யப்பட்டு, பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு வருகிறார்கள் தொடர்ந்து பல புதைகுழிகள் தமிழீழத்தில் கண்டு பிடிக்கப் பட்டு வருவதாகவும் யாவற்றிற்கும் சிறிலங்கா இராணுவமே காரணகர்த்தாவாக உள்ளதாகவும் கூறினார். அவர் மேலும் கூறியதாவது பத்திரிகைத் தணிக்கையை அமுல்படுத்தியுள்ள சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மீதான போரை கண்மூடித்தனமாக நடாத்துவதை இவ் ஆணைக்குழு கண்டிக்க வேண்டும் என வேண்டிக் கொண்டார்.

இவ் ஆணைக்குழுவுக்கு கொழும்பிலிருந்து வருகைதந்திருந்த திரு பாசனா அபயவர்த்தனா கூறியதாவது வடகிழக்கில் யுத்தம் இதுவரையில் 60000 உயிர்களை பலிகொண்டுள்ளதாகவும், 1650 தமிழர்வரை தற்சமயத்தில் குற்றச் சாட்டுகள் இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இது போன்ற மனித உரிமை மீறல்களை இவ் ஆணைக்குழுவின் கவனத்தில் கொண்டுவருவதற்காகவே தான் இங்கு சமூகம் அளித்துள்ளதாகவும் கூறினார்.

திரு. அபயவர்த்தனா மேலும் கூறுகையில் அண்மை காலங்களில் பல தமிழர்கள் கைதுசெய்யப் பட்டுள்ளதாக, உதாரணமாக காட்டினார். தமிழர் கொழும்பிலும் அதை அண்டிய பகுதிகளிலும் கைது செய்யப்பட்டு கடுமையான சித்திரவதைக்குள்ளாகி வருவதை திகதி, பெயர், இடம் போன்ற விபரங்களுடன் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

இதேவேளை "சர்வதேச சட்டநிபுணர் கமிஷன்" சார்பில் உரையாற்றிய பிரதிநிதி சிறிலங்காவில் இராணுவம் அரச மன்னிப்புடன் தொடர்ந்து மனித உரிமை மீறல்களை செய்வதாகவும் இதை ஆணைக்குழு கண்டிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

"சர்வதேச அனைத்து சமயங்களின்" பொதுச் செயலாளர் கலாநிதி சாள்ஸ் கிறேப் உரையாற்றுகையில் சிறிலங்காவில் புத்தசமயத்தை அரசியல் யாப்பின் மூலம் அரச சமயமாகப் பிரகடனப் படுத்தியுள்ளதும் புத்த சமய குருமாருக்கு விசேட அந்தஸ்து கொடுத்துள்ளதும் தற்போதைய போருக்கு காரணிகளாக அமைகிறது என்றார். திரு. சாள்ஸ் தொடர்ந்து பேசுகையில் கடந்த ஆண்டு புத்தகோவிலில் நடைபெற்ற குண்டு வெடிப்பை முக்கியப் படுத்தும் அரசாங்கம் எதற்காக 1050 சைவ ஆலயங்கள் மற்றும் தேவாலயங்களை சிறிலங்கா அரச படைகளால் அழிக்கப்பட்டதை கவனத்தில் கொள்ளவில்லை என வினவினார். வட கிழக்கில் தொடர்ந்தும் சைவ ஆலயங்கள், தேவாலயங்கள் அழிக்கப்படுவதையும் சுட்டிக்காட்டினார். அத்துடன் சைவ, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமய விடுமுறைகளை சிறிலங்கா அரசாங்கம் அலட்சியப் படுத்தியது மட்டுமல்லாமல் ஒரு சில தினங்களை மட்டுமே விடுமுறையாக்கியுள்ளதாகவும் கூறினார்.

தொடர்ந்து நடைபெறும் இவ் ஆணைக் குழுவிற்கு வருகை தந்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு சிறிலங்காவில் நடைபெறும் மனித உரிமைகள் மீறல் பற்றிய ஓர் விளக்கக் கூட்டம் வேறுபட்ட நாடுகளைச் சார்ந்த ஒன்பது அரச சார்பற்ற நிறுவனங்களினால், 12-ம் திகதி திங்கட்கிழமை ஐ.நா கட்டடத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இக் கூட்டத்தில் திருமதி கரன் பார்க்கர், திரு. குமார் பொன்னம்பலம், திரு. பாசனா அபயவர்த்தனா, கலாநிதி ஜோன் நீல்சன், திரு.பிரான்சிஸ் சேவியர், கலாநிதி சாள்ஸ் கிறேப், திரு. ஜோன் ஜக் கிறகிளீசியான் ஆகியோர் உரையாற்றினர்.

இவர்கள் கூறியதாவது சிறிலங்கா அரசு நிபந்தனையின்றி [illegible] விடுதலைப்புலிகளுடன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை உடன் ஆரம்பிக்க வேண்டும். தொடர்ந்து சிறிலங்கா அரசுகள் தமிழ் மக்களை ஒடுக்குவதை சர்வதேச சமூகம் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது என்ற வேண்டுகோளும் ஐ.நா மன்றத்தில் வலியுறுத்தப்பட்டது.

---

## சாதனையாளரின் [illegible] —மேஜர் [illegible]

ராக களத்தில் நின்றபோது கஸ்பாவின் ஒன்று விட்ட சகோதரியான லெப். மதனா மட்டுநகருள்ள அதிரடிப்படை தளத் தகர்ப்பில் வீரச்சாவடைய இயக்கத்தில் இணைந்த ஏழு ஆண்டுகளின் பின் அப்போது தான் முதல் முதலாக விடுமுறையில் மட்டக்களப்பிலிருந்த தன் குடும்பத்திடம் போனாள்.

விடுமுறை முடிந்த ஒரு மாதத்தின் பின் வன்னி திரும்பியவளுக்கு மேஜர் துளசியின் வீரச்சாவுச் செய்தி பெரிய அதிர்ச்சியைத் தந்தது அந்த அதிர்ச்சியிலேயே ஜெயசிக்குறுய் களத்திற்கு திரும்பினாள்.

தன் அணியிலிருந்த போராளிகள் [illegible]

[illegible]



# சிங்களம் தந்த சிதைவுகளும்



## இடப்பெயர்வும் மீள் இடப்பெயர்வும்

பல லட்சம் மக்கள் தமிழீழம் பூராவும் இடப்பெயர்வினால் சிதைக்கப்பட்ட வாழ்முறையினுள் இருந்து வருகின்றனர். தமது வாழ்விடங்களை விட்டு விரட்டப்படும் மக்கள் அனைத்துத் தேவைகளுக்குமான ஆதாரங்களை இழக்கின்றனர் உணவு உடை உறையுள் போன்ற அத்தியாவசியத் தேவைகளுக்காக பிறர் தயவை எதிர் நோக்கும் நிலைக்குத் தள்ளப் படுகின்றனர். தமது புதிய வாழ்விடத்தில் சுயமாக வாழ எத்தனிக்கும்போது மீள அவ்விடங்களை விட்டு அவர்கள் விரட்டப்படுகின்றனர்.

வன்னியில் இத் தொடர் இடப்பெயர்வுகள் ஓர் வழமையான நிகழ்வாகிவிட்டது. பொது இடங்களிலும் தற்காலிக கொட்டகைகளிலும் நெரிசலான வாழ்வை பல லட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களை மேலும் சிதைக்கும் விதத்தில் இடம்பெயர்ந்த மக்களிற்கான உணவு விநியோகத்தைக் கடந்த வருடம் சிங்கள அரசு மறுக்க ஆரம்பித்தது.

ரிவிரச இராணுவ நடவடிக்கையால் 5லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் [illegible] தமது வாழ்விடத்தை இழந்தது. சத்ஜெய, எடிபல, ஜயசிக்குறு என்பன வன்னியில் பல லட்சம் மக்களை விரட்டியது. ரணகோச மேலும் பல்லாயிரம் அகதிகளை உருவாக்கியது. மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் இத்தகைய இடப்பெயர்வுகளை காலத்துக்குக் காலம் சிங்கள அரசு துரிதப்படுத்துகிறது.



## போசாக்கின்மை: சிங்களப் போரின் இலக்கு

வன்னியில் 1 – 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 55வீதத்தினர் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். 95இல் இது 14வீதமாக மதிப்பிடப் பட்டிருந்தது.

20வீதப் பாடசாலை மாணவர்கள் பெரும் பசியுடன் தான் பாடசாலைக்குச் செல்கின்றார்கள் என அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பில் தெரிவிக்கப் பட்டிருந்தது. பல பாடசாலைகள் இப் பசி காரணமாக மதிய உணவுக்கு முன்னரே மூடப் படுகின்றன. இரவுக் குருடு போன்ற நோய்கள் இப் போசாக்கின்மையால் பெருகி வருகின்றன. இப் போசாக்கு உணவுப் பற்றாக்குறை சிங்கள அரசினால் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டது. தமிழர்களுக்கான உணவுவிநியோகத்தைக் கட்டுப் படுத்தும் அதிகாரம் சிங்கள இராணுவத்தின் கைகளில் கொடுக்கப்பட்டுள்ளது. மறுபுறம் போரின் நீளிருந்தால் பல்லாயிரம் தமிழர் விளை நிலங்களைச் சிங்கள அரசு சிதைத்து வருகின்றது இதன் மூலம் சுய உற்பத்தி மூலமான உணவுத் தன்னிறைவை சிங்கள அரசு நிராகரிக்க முற்படுகின்றது.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



## பெண்: விளைவைச் சுமப்பவள்

இராணுவ ஆக்கிரமிப்பில் சகல பின் விளைவுகளையும் எதிர்கொள்ளும் பாத்திரத்தை பெண் வகிக்கின்றாள்.

8500 பெண்கள் இராணுவத்தினரால் தென்தமிழீழத்தில் கணவன்மாரை இழந்தவர்களாக வாழ்கிறார்கள் எனவும் 6000 சிறுவர்கள் பெற்றோரை இழந்து வாழ்கிறார்கள் எனவும் ஒரு கணிப்பீடு கூறுகின்றது. திருகோணமலை, மூதூர் பகுதிகளில் பல்லாயிரம் பெண்கள் உழைப்பாளிகளான கணவனை இழந்து மோசமான வாழ்க்கைச் சுமைகளோடு போராடுகிறார்கள் என மற்றும் ஓர் கணிப்பீடு கூறுகின்றது.

## உரிமைகள் மறுக்கப்படும் தமிழ்ச் சிறுவர்கள்

சிறுவர்களுக்கான உலக உடன்பாடு வரையப்பட்டு பத்து வருடங்கள் பூர்த்தியாகும் இவ் வேளையில் தமிழ்ச் சிறுவர்கள் தமது உணவு, உடை, உறையுள் என்பவற்றைச் சிங்கள பேரினவாதத்தினால் இழந்து கல்வி உரிமை மறுக்கப்பட்டவர்களாக வாழ்ந்து வருகின்றனர். ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளில் பல கல்விக் கூடங்கள் இராணுவ முகாம்களாக அல்லது இராணுவ [illegible] உள்ளன. தென் தமிழீழத்தில் [illegible] வீதப் பாடசாலைகள் அழிக்கப்பட்டுள்ளதாக [illegible] கூறியுள்ளார். வன்னியில் பல கல்விக் கூடங்கள் குண்டுவீச்சுக்களால் சேதமாக்கப்பட்டன அல்லது இடப்பெயர்வினால் கைவிடப்பட்டன. [illegible] கல்விக் கூடங்கள் ஆசிரியர் பற்றாக்குறை, உபகரணப் பற்றாக்குறை, போன்ற இராணுவத்தால் ஏற்படுத்தப்பட்ட தடைகளின் மத்தியிலிருந்து [illegible] மாணவர்களை கல்விக் கூடங்களை விட்டு விரட்ட முயற்சிக்கின்றது.



## வேலை வாய்ப்பு பறிக்கப்பட்ட தமிழர்கள்



இடப்பெயர்வும் சிங்கள இராணுவத்தின் பொருளாதாரத் தடைகளும் தமிழர்களது பல்வேறு தொழில் வாய்ப்புகளை அழித்ததுடன் புதிய தொழில் வாய்ப்புகளுக்கான வழிகளையும் இல்லாமலாக்கிவிட்டது. [illegible] தொழில் வாய்ப்பை [illegible]. சுமார் 70 ஆயிரம் [illegible] நிலங்கள் வன்னியில் விவசாயம் செய்வதற்கான வாய்ப்பை எதிரி இராணுவத்தினால் இழந்துள்ளன. தமிழீழப் பகுதிகளில் கைத்தொழில் துறைகளுக்கான உட்கட்டுமானங்கள் காலங்காலமாக சிங்கள அரசினால் புறக்கணிக்கப்பட்டு வந்தது. தற்போது இராணுவ ஆக்கிரமிப்பு இதற்கான அனைத்து சாத்தியங்களையும் முழுமையாக இல்லாதாக்கிவிட்டது. துறைமுகங்களும் நெடுஞ்சாலைகளும் இராணுவ தேவைகளுக்காகவே பாவிக்கப் படுகின்றன.



மல்லாவி

# தமிழீழம் இடும் தடுப்பும்



**சிங்கள அரசின் போரினால் சிதைக்கப்படும் மக்களின் நாளாந்த வாழ்க்கை நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கும் உடனடி, இடைக்கால நிவாரணங்களை வழங்குவதற்கும் தமிழர்கள் தமக்கான சுயமான உட்கட்டுமானங்களை நிறுவி வருகின்றனர். இவ் அமைப்புக்கள் மக்களின் தேவைகளை பூர்த்திசெய்யும் செயற்திட்டங்களுடன் பரிணாம வளர்ச்சி கண்டு வருகின்றது.**



1985ல் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மக்களின் பராமரிப்புக்கான பணிகளுக்காக உருவாக்கப்பட்டது. 1987ல் தமிழ் பகுதிகள் எங்கும் புனர்வாழ்வுக்கழகத்தின் பணிகள் விரிவடைந்தன.

1996முதல் பாரிய இடப்பெயர்வுகளை எதிர்கொள்வதற்கான செயல் திட்டங்களுடன் ஒரு அரசிற்கு ஈடான பணிகளை புனர்வாழ்வுக் கழகம் விஸ்தீரணம் செய்தது.

பல்வேறு சர்வதேச அமைப்புக்களுடனும் உள்ளூர் அமைப்புக்களுடனும் இணைந்து இப்பணிகளில் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டது.






இடம்பெயர்ந்த மக்களுக்கான மாதிரிக் கிராமங்கள் வன்னிப் பகுதியெங்கும் நிறுவப்பட்டு வருகின்றன.



சிறுவர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் கல்வி வளர்ச்சிக்குமாக பல்வேறு சிறுவர் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. சர்வதேச சிறுவர் உடன்படிக்கையின் நோக்கங்களை இலக்காக வைத்து இவை இயங்கி வருகின்றன.



வலுவிழந்தவர்களை பாதுகாப்பதற்கும் உதவுவதற்குமாக பல்வேறு சர்வதேச அமைப்புக்களுடன் இணைந்து வெண்புறா திட்டம் போன்ற திட்டங்களை புனர்வாழ்வுக் கழகம் நடத்தி வருகின்றது.



ஐநா அகதிகள் ஆணைக்குழு போன்ற நிறுவனங்களுடன் கைகோர்த்து






இடம்பெயர்ந்தோருக்கு வேண்டியவற்றை வசதிகளையும் அதற்கான பயிற்சிகளையும் வழங்கும் பணிகள் இடம் பெறுகின்றன.



உழைப்பவர்களை இழந்த பெண்களுக்கு தொழிற்பயிற்சியை அளிப்பது முதல் கர்ப்பவதிகள் - பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கான போசாக்கு உணவு அளிப்பது வரை பல்வேறு பெண்கள் அபிவிருத்தித் திட்டங்களை அவை நடைமுறைப்படுத்தி வருகின்றன.



எழுச்சி



தமிழீழத்தின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கும், விரிவான பூர்வமான திட்டமிடலை செயற்படுத்தவும் தமிழீழபொருளாதார மேம்பாட்டுக்கழகம் பல்வேறு செயல்திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது.






# கிடைக்கப் பெற்ற மாவீரர்களின் பெயர்கள்

04-04-99 அன்று மட்டக்களப்பு மாவட்டம் பெலிக்குடா எனும் இடத்தில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் போராளி ஒருவரும் ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவடைந்துள்ளனர்.

**கப்டன் நிலவன் அல்லது நிலவழகன்**
**சிவசுப்பிரமணியம் உமா**
மட்டக்களப்பு மாவட்டம்
த/மு 2ம் வாய்க்கால் உருத்திரபுரம், கிளிநொச்சி

**ஆதரவாளர் கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணகுமார்**
மட்டக்களப்பு மாவட்டம்

07-04-99 அன்று மட்டக்களப்பு மாவட்டம் கன்னன்குடா, குடாபகுதியில் தேசத்ரோகிகள் மறைந்திருந்து தாக்கியதில் போராளியொருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**2ம் லெப். வரதகுமார் கந்தப்பு நவரத்தினம்**
மட்டக்களப்பு

21-07-97 அன்று ஜெயசிக்குறுய் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் விழுப்புண் அடைந்திருந்த போராளி ஒருவர் 08-04-99 அன்று வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை தணிகையரசன் பிரான்சிஸ் சேவையர் அன்ரனி**
யாழ். மாவட்டம்
த/மு 112. பாண்டியன் குளம் 2ம் கட்டை மல்லாவி

09-04-99 அன்று பரந்தன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**வீரவேங்கை சிறிகாந்தரூபன் கணபதிப்பிள்ளை ஜெகநாதன்**
மட்டக்களப்பு மாவட்டம்

**வீரவேங்கை ஊர்வலன் சத்தியமூர்த்தி லோகநாயகன்**
மட்டக்களப்பு மாவட்டம்

**வீரவேங்கை உதயபாலன் கோபால் தில்லைநாதன்**
அம்பாறைமாவட்டம்

09-04-99 அன்று முல்லை மாவட்டத்தில் சுகயீனம் காரணமாக போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

**வீரவேங்கை அருட்செல்வி முத்தையா கிருஸ்ணவேனி**
நெடுங்கேணி, முல்லைத்தீவு
த/மு ஒட்டிசுட்டான் வீதி, புதுக்குடியிருப்பு

18-04-99 அன்று மாங்குளப் பகுதியல் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் போராளியொருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை சசிகலா கிருதிராஜா தேவிகா**
யாழ். மாவட்டம்
த/மு 4ம் வட்டாரம் இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு

18-04-99 அன்று மன்னாரில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை நிலவைமாறன் அச்சன்தனராஜா சகாயமைந்தன்**
வவுனியா
த/மு 8ம் கட்டை அக்கராயன்

18-04-99 அன்று மன்னார்ப் பகுதியல் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் விழுப்புண் அடைந்திருந்தபோராளியொருவர் 19-04-99 அன்று வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை இறைமகான் ஜெயசந்திரராஜா வசந்தமோகராஜா**
வவுனியா




**படுகொலை செய்யப்படும்**
**எமது இனத்தைக் காப்பாற்ற**
**உலகத்தை துணைக்கழைப்போம் வாரீர்!**

**சுவிஸ்**

இடம்: சூரிச் (Lagerstrasse) புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்
நேரம்: காலை 10.00 மணி

இடம்: ஜெனீவா புகையிரத நிலையத் திற்கு அருகாமையில்
நேரம்: பிற்பகல் 2.00 மணி

தமிழீழ விடுதலைப் புலிகள் (சுவிஸ் பணியகம்)

**யேர்மனி**

இடம்: DGB Friedrich Ebert Str. 34, (Nahe Hauptbahnhof) 40210 Duesseldorf.
நேரம்: காலை 09.30 மணி

உலகத்தமிழர் இயக்கம் - யேர்மனி

**பிரான்ஸ்**

இடம்: Place du la République, République - Saint Augustin
நேரம்: பிற்பகல் 2.00 மணி

தமிழர் ஒருங்கிணைப்புக்குழு - பிரான்ஸ்- 01 43 58 11 42

# அடுத்த தேர்தலின் குறியீடு

## புறாவா கழுகா

**போர்க்கோசங்கள் தேர்தல் வெற்றியைத் தீர்மானிக்கலாம்.. ஓயாத அலைகள் சிங்களத்தின் தலைவிதியையே தீர்மானிக்கும்!!**

அடுத்த தேர்தலுக்கு, இராணுவச் சாதனைகள் கைகொடுக்குமா? அல்லது தீர்வுப் பொதி, சமாதானப் பேச்சுவார்த்தை என்ற பரபரப்பான பிரச்சாரங்கள்தான் கைகொடுக்குமா?

இதுவே, சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா முன்னுள்ள இரு பிரதான தேர்வுகளாகியுள்ளன. சிங்கள மக்களின் நலன்கள், அவர்களின் பொருளாதார வளம், தொழில்துறை வளர்ச்சி, வேலைவாய்ப்பு, வாழ்க்கைச்சுமை, இப்படி.. இன்னோரன்ன.. மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து அவர்களின் வாழ்வாதாரத்தை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்ற பிரச்சினைகள் குறித்து தற்போதைக்கு அலட்டிக்கொள்வதற்கில்லை.

தற்போது, ஆளும் கட்சிக்கு தேவைப்படுவது, எப்போதுமே வெற்றிவாகைசூடும் திரைப்படக் கதாநாயகனுக்குரிய இமேஜ் மட்டுமே. அதுவே அடுத்த தேர்தலில் வாக்குகளை அள்ளித்தரும் என்பதில், அது மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கின்றது.

அதேவேளை, இறப்புகளும் அழிவுகளும் பல்கிப்பெருகிப்போயுள்ள இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை நிலைநாட்டப்போவதாகவும், யுத்தத்திற்கு இறைந்த பெரும்தொகை நிதியை நாட்டுமுற்னேற்றத்திற்கு திருப்பி விடப்போவதாகவும், இறந்து கொண்டிருக்கின்ற பல்லாயிரம் மனித உயிர்களைக் காப்பாற்றி, அவர்களின் ஆற்றலில் நாட்டை வளப்படுத்தப்போவதாகவும் அறிக்கைவிடுவதன்மூலம் வாக்குவேட்டைக்கு வாய்ப்பிருக்குமா என்பதிலும், சந்திரிகா அரசு தனது ஆராய்ச்சியை மேற்கொள்ளும்.

யுத்தவெற்றி குறித்த இமேஜ் என்பது, வெறுமனே சிறீலங்கா அரசினதோ அல்லது இராணுவத்தினரது கைகளிலோ இல்லை. அது முற்றிலும் தவறான கணிப்பீடாகும் என்பது சிறீலங்கா அரசிற்கும் நன்கு தெரிந்ததுதான். இந்த வெற்றி மாயையை தலைகீழாக மாற்றும் வல்லமை விடுதலைப் புலிகளிடம்தான் உள்ளது. சந்திரிகாவோ, அல்லது ரத்வத்தையோ அல்லது படைத்துறைத் தளபதிகளோ தீர்மானிக்கும் விடயமல்ல இது. இது தமிழீழத் தேசியத் தலைவரின் கைகளிலேயே தங்கியுள்ளது.

'வெளிநாட்டில் இருந்தோ உள்நாட்டில் இருந்தோ யுத்தத்தை நிறுத்துமாறு எந்தவிதமான நிர்ப்பந்தங்கள் வந்தாலும் யுத்தம் நிறுத்தப்படமாட்டாது. ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை மூலம் கிளிநொச்சி வரை சென்றே தீருவோம். வவுனியா - கிளிநொச்சி தரைப் பாதை திறக்கும்வரை யுத்தம் தொடரும்.' இது சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்தை அன்று தெரிவித்தது. யாழ் குடாநாட்டை ஆக்கிரமித்த திமிரில், விடுதலைப் புலிகள் பற்றிய பிழையான கணிப்பீட்டில், தமது இராணுவ பலம் குறித்த அதீத நம்பிக்கையில் மேற்கொள்ளப்பட்ட ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை, வெற்றிகரமாய் முன்னேற்றம் காணுவதாய் தோற்றம் காட்டியபோது தெரிவித்த கருத்து.

இவ் இராணுவ நடவடிக்கை ஆரம்பித்து, மறுமாதம் பத்திரிகையாளர் மாநாட்டில் இந்த வீராப்பான கருத்தைத் தெரிவித்த ரத்வத்தையால், இந்த நடவடிக்கையின் ஆயுளைத் தீர்மானிப்பவராய் இருக்க முடியவில்லை.

அதாவது வவுனியா கிளிநொச்சி தரைப்பாதையை அமைக்கும் திட்டத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை கைவிடப்பட்டதாக கடந்த டிசம்பர் மாதம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆக சிங்கள அமைச்சர்களோ அல்லது இராணுவத் தளபதிகளோ, களமுனை நகர்வுகளை, இராணுவநடவடிக்கைகளை தீர்மானிப்பவர்களாக இல்லை. அதனை விடுதலைப் புலிகளே தீர்மானிக்கின்றனர்.

எப்பகுதியில், சிறீலங்காப்படையினரை அனுமதிக்கலாம், எப்பகுதியில் மறித்துத் தாக்குதல் வேண்டும், எங்கு அவர்களுக்கு உட்காரவே அவகாசம் கொடுக்கக் கூடாது, எங்கு அவர்களைத் துடைத்தெறிய வேண்டும் என்பதை தலைவர் பிரபாகரனே தீர்மானிக்கின்றார்.

இந்த யதார்த்தம் புரிந்தோ என்னவோ, நீண்டகால அடிப்படையில் தோல்வியைத் தந்தாலும், குறுகிய கால அறுவடைக்கு ஏற்றவகையிலேயே, சிறீலங்கா அரசு, இராணுவ நடவடிக்கைகளை தற்போது திட்டமிடுகின்றது என்றே கொள்ள வேண்டியுள்ளது.




**இந்த யதார்த்தம் புரிந்தோ என்னவோ, நீண்டகால அடிப்படையில் தோல்வியைத் தந்தாலும், குறுகியகால அறுவடைக்கு ஏற்றவகையிலேயே, சிறீலங்கா அரசு, இராணுவ நடவடிக்கைகளை தற்போது திட்டமிடுகின்றது என்றே கொள்ளவேண்டியுள்ளது**

மாங்குளம் வரை கனிசமான படையினரை நிலைகொள்ள வைத்திருக்கும் சிறீலங்கா அரசு, அதன் பிரதான முயற்சி கைகூடாததால் அந் நடவடிக்கையை கைவிட்டது. எனினும், வடமேல் மாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு, கிழக்குப் புறத்தே ஒட்டிசுட்டான் வரை இராணுவத்தினரை நகர்த்தி ஒரு தொகை படையினரை நிலைகொள்ளவைத்திருக்கின்றது. பின்னர் ஐந்து மாகாணசபைத் தேர்தல்களுக்காக மறுபுறத்தே மேற்குப் பகுதியில், மடு மாதா ஆலயம், இரணை இலுப்பங்குளம் போன்ற பகுதிகளையும் ஆக்கிரமித்து படையினரை நிலைகொள்ளவைத்துள்ளது.

பாதை திறப்பு என்ற பிரதான இலக்கு மறந்து தற்போது, எவ்வளவு சதுரக்கிலோமீற்றர்கள் மீட்கப்பட்டுள்ளன என்று கணக்குக் காட்டும் வேலையிலேயே அமைச்சர் ரத்வத்தை ஈடுபட்டுள்ளார்.

வெள்ளைத்தாளில் மனம்போன போக்கில், கறுப்புத்தூரிகையால் குறுக்கும் மறுக்கும் கோடுகள் போட்டு விளையாடும் சிறுவனைப் போல, ஒரு இலக்கில்லாத இராணுவ நகர்வுகளே தற்போது மேற்கொள்ளப்படுவதாக படைத்துறை ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். விடுதலைப் புலிகளின் பிரதான தாக்குதல் வடிவமான கரந்தடிப் போர்முறைக்கு ஏற்ப களநிலையை சிறீலங்கா ஆட்சிபீடம் ஆக்கிக் கொடுத்திருப்பதாகவே அவர்கள் கருதுகின்றனர்.

தமது இராணுவ அரசியல் பூகோள நலன்களை பாதிப்பதாகக் கருதும் எதிரிப்படையின் இராணுவ நகர்வுகளை முற்றாக முடக்கிப் போடும் விதமாய் தமது எதிர்த்தாக்குதல்களையும் முறியடிப்பு நடவடிக்கைகளையும் வைத்துக்கொண்டு, மறுபுறத்தே, தமது தரப்பு இழப்புக்களைக் குறைத்துக்கொண்டு, எதிரிக்கு பேரிழப்பைக் கொடுக்கும் விதமாய் சிறுசிறு தாக்குதல்களை அடிக்கடி பரவலாக நடத்தும் கரந்தடித் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்திவருகின்றனர் என்பதை படைத்துறை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

போர்க்கோசம் இராணுவ நடவடிக்கை, மாகாணசபைத் தேர்தலை வெல்லுவதற்கு காரணமாக இருந்துள்ளது எனக் கருதி, சிறீலங்கா அரசு, அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பாராளுமன்றத்தேர்தல் மற்றும் சனாதிபதித் தேர்தலுக்கு கைகொடுக்கும் என்ற நினைப்பில் அடுத்த இராணுவ நடவடிக்கை குறித்து ஆராயக்கூடும்.

எது எப்படியிருப்பினும், விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகளிற்கு காத்திருக்கவேண்டிய தவிப்பும் சிங்களத்திடம் இருக்கின்றது. ஓயாத அலைகளின் தாக்கத்திற்கு, சிங்களத்தின் அனைத்து வியூகங்களும், சிதைந்து சின்னாபின்னமாகிவிடும் என்பது யதார்த்தம். அதனை தலைவரும் புலிகளுமே தீர்மானிப்பர்.

**- சுப்பு -**



# புதைகுழி

இரவு படுத்து மிக நீண்ட நேரமாகி விட்டது ஜயந்தவுக்குத் தூக்கம் வரவில்லை. இரவின் அமைதியில் தூரத்தே குரைக்கும் நாய்களின் ஒலி தெளிவாகக் கேட்டது. இராணுவ முகாம் உசார் நிலையில் வைக்கப்பட்டிருந்ததால் காவலரண்களில் கடமை புரிவோர் உறங்காத விழிகளுடன் கடமையிலீடுபட்டிருந்தனர். ஜயந்தவுக்கு இன்று பகல் 'டியூட்டி' இப்போது தான் கடமை முடிந்து, குளித்து உணவருந்திவிட்டு படுக்கையில் வீழ்ந்தான். இமை மூடியிருந்தும் உறக்கம் வரவில்லை. போராளிகள் எந்த நேரமும் தாக்கலாம் அவர்களுடைய அதிரடித் தாக்குதலுக்கு இப்போதெல்லாம் ஈடு கொடுக்க முடிவதில்லை. எனவே எந்நேரமும் மரணபயத்துடன்தான் பலர் கடமையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதனால் இரவு 'டியூட்டி' இல்லாவிட்டாலும், உறக்கம் கலைவது சர்வசாதாரணம். ஆனால் ஜயந்த மட்டும் விதிவிலக்கு சாப்பிட்டு விட்டு வந்து படுத்தால் மரக்கட்டைதான். மறுநாள் விடியத்தான் விழிப்பு வரும். ஆனால் இன்று அவனால் அப்படி உறங்க முடியவில்லை. ஏதோ நடக்கப்போவதாக மனதில் ஒருவித பய உணர்வு இன்று அவனை வதைத்துக் கொண்டிருந்தது. விரைவிலேயே விடிந்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தபடி கொட்டாவி விட்டான்.

இனந்தெரியாத இந்தப் பயப்பிராந்திக்கும், உறக்கமின்மைக்கும் என்ன காரணம்? ஓ... இன்று காலையில் கேட்ட வானொலிச் செய்திதான் காரணம். புதைகுழிகள் தோண்டப்பட்டு, காணாமற்போன அப்பாவி இளைஞர்கள், யுவதிகள் பற்றி பூரண விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும் என்று யாழ்ப்பாணப் பெற்றோர்களும் மனித உரிமைக் குழுவும் கண்டனப் பேரணி நடாத்தி ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பிய செய்தி தான் அவனைப் புழுவாய் அரித்துக் கொண்டிருந்தது. காற்றுக் கொஞ்சம் பலமாக வீசிக் கொண்டிருந்ததால் 'ஜவ்' என்ற சத்தம் விட்டுவிட்டு ஒலித்தது. 'பராலைற்' சுழற்றி அடிக்கப்பட்டு சுற்றுப் புறமெங்கும் பார்க்கப்படுவது தெரிந்தது. சீ... இந்த இராணுவ வேலைக்கே வராமல் விட்டிருக்கலாம்..... வறுமை... வேலையில்லாப் பிரச்சனை...ஆரியவன்ச தேரரின் நாடுகாக்கும் தீவிரமான ஆலோசனை இவை எல்லாமாகச் சேர்ந்து அவனை இந்த திரிசங்கு சொர்க்கத்திற்கு கொண்டு வந்து விட்டது. இங்கே பணிபுரியும் சிப்பாய்களில் பெரும்பாலானோர் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பதையும் ஒரு சில மேலதிகாரிகளே வசதியான குடும்பத்திலிருந்து வந்தவர்களாக இருப்பதையும் இங்கே வந்து சேர்ந்த அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது. 'நாடுகாக்கிறோம், மக்களுக்கு பாதுகாப்புபணிக்கிறோம்' என்று கூறிக்கொண்டு இந்த நாட்டின் சிறுபான்மை மக்களுக்கு இவர்கள் செய்யும் கொடுமைகளை அவன் கண்டான்.

ஆரம்பத்தில் ஜயந்தவுக்கு இதையெல்லாம் தாங்க முடியாமல் இருந்தது. எனினும் பன்றியுடன் சேர்ந்த கன்றும் மலம் உண்ணும் என்பது போல அந்நிய இராணுவத்தினருக்கேயுரித்தான எல்லாப் பண்புகளும் அவனிடமும் குடிகொண்டது. கூடவே குடிப்பதற்குக் கிடைக்கும் சாராயமும் சேர்ந்து கொண்டதில் அவன் முற்றாக மாறிப்போனான்.

அப்பாவி இளைஞர்களைக் கொண்டுவந்து அணுஅணுவாகச் சித்திரவதை செய்து கொல்வது, இளம் பெண்களை சந்தேகத்தின் பேரில் என்று அழைத்து வந்து பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கிக் கொலை செய்து புதைகுழியிலிட்டு மூடுவது என்பதெல்லாம் இந்த இராணுவ முகாமில் சர்வ சாதாரண நிகழ்வாகவிட்டது.

'அண்ணை என்னை ஒன்றும் செய்யாதீங்க....' என்று உடைகளற்ற கோலத்தில் கையெடுத்து அவன் கும்பிட்ட அந்தக் காட்சி இன்னமும் அவன் மனதில் திரைப்படமாய் ஓடியது

வழக்கம் போல் சுற்றி வளைப்பின் போது சில இளைஞர்களும், யுவதிகளும் சந்தேகத்தின் பேரில் என்று அழைத்துவரப்பட்டார்கள். ஒரு இளைஞனை இவனுடன் இன்னும் நாலைந்து இராணுவத்தினரிடம் கையளித்தார்கள்.

'அண்ணை... நான் படிக்கிறனான் எனக்கும் போராட்டத்திற்கும் எந்தத் தொடர்புமில்லை.... என்னை விட்டுடுங்க... என்னை ஒன்றும் செய்யாதீங்க' என்று அலற அலற அந்த இளைஞனை இவர்கள் சித்திரவதை செய்தார்கள்.

ஜயந்தவும் சக சிப்பாய்களும் முதலில் அவனை அடித்தார்கள். 'நீ கொட்டியா தானே?'

'இல்லை.... இல்லை... ஐயோ...' அவன் அலறினான். 'தண்ணி...

**ச.முருகானந்தன்.**

தண்ணி....'

பின்னர் அவனுக்கு பருகுவதற்கு மூத்திரத்தைக் கொடுத்து வற்புறுத்தினார்கள். அவன் மறுக்கவே அவனது இமையிருந்தி உரோமங்களை பிடுங்கினார்கள்.

'ஐயோ.. ஐயோ.. அம்மா... என்ர அம்மா...' என அவன் அலறுவதையும் பொருட்படுத்தாமல் குண்டூசிகளை அவனது விரல் நகங்களுக்கிடையில் செலுத்தினார்கள். 'சொல்லு.. நீ... கொட்டியாக்கு 'சப்போட்' தானே?'

'இல்லை.. ஐயோ.. அம்மா...' அந்த இளைஞன் விம்மி வெடித்தான். அவர்கள் எதையுமே பொருட்படுத்தாமல் அவனைத் தலை கீழாகக் கட்டித்தூக்கி பெரிய தடிகளால் அடித்தார்கள். உடலின் பல உறுப்புகளிலிருந்தும் இரத்தம் கசிந்தது. 'தண்ணி.. தண்ணி...' என அவன் முனகினால் மீண்டும் மூத்திரம்!.

அவனை அறுத்துக் கீழே தடார் என விழ வைத்தாகள். துப்பாக்கியின் முனையால் அவனது உடலைக் குத்திக் கிழித்தார்கள். அவனது ஆவி பிரிந்த போது தான். விடுதலை கிடைத்தது.

பின்னர் அவனைக் குழி ஒன்றில் புதைத்தார்கள். மது மறு படியும் வழங்கப்பட்டதும் சிப்பாய்கள் சிங்கங்களாகக் கர்ஜித்துக் கொண்டிருந்தார்கள்.

மேலதிகாரியின் அறையிலிருந்து அழைத்து வரப்பட்ட பெண் ஒருத்தியை ஜயந்த குழுவினரிடம் ஒப்படைத்தார்கள். அவள் ஏற்கனவே சோர்வுற்றிருந்தாள். அவளை அழைத்துச் சென்று தனியறையுள் தள்ளினர்.

'அண்ணை... என்னை ஒன்றும் செய்யாதீங்க... கொன்றிடுங்க...' அவள் இரு கரம் கூப்பி வணங்கினாள். அவனுக்கோ அவனது தோழர்களுக்கோ அவளது வேண்டுதல் இரக்கத்தைக் ஏற்படுத்தவில்லை. அவளை ஒவ்வொருவராக மாறிமாறி வல்லுறவுக்குள்ளாக்கினார்கள். ஜயந்தவுக்கு அது முதல் அனுபவம்... பருந்து கோழிக்குஞ்சைக் குதறுவது போலக் குதறித்தள்ளிவிட்டான்.



அவர்களது பசி தீர்ந்த போது அவளது உடலில் உயிர் இருக்கவில்லை. அவளது உடலை கொற கொற என்று இழுத்துச் சென்றார்கள். புதைகுழி வெட்டப்பட்டு அதனுள் அவளது உடலைவிட்டு மூடினார்கள். தூக்கம் வராத இந்த இரவில் 'ஐயோ... அண்ணை... என்னை ஒன்றும் செய்திடாதீங்க கொன்றிடுங்க ....' என்று அவள் அலறியது காதோடு ஒலிப்பது போலிருந்தது. 'சீ.. என்ன கொடுமை செய்து விட்டோம்.' என அவனது மனது அடித்துக் கொண்டது. அவனது தங்கை குமாரி, காதலி நந்தாவதி எல்லாம் அவனது நினைவில் தோன்றினார்கள். 'சீ... நீ என்ன மனிதனா...?' என்று அவர்கள் அவனைக் காறி உமிழ்ந்தார்கள்.

அவனுக்கு உறக்கம் வரவில்லை. சாமக்கோழி எங்கோ தொலைவில் கூவியது. இந்தப் புதை குழிகளிலுள்ள எலும்புக் கூடுகளையும், தடயங்களையும் அகற்றினால் தான் எமக்கு நிம்மதி என்று காலையில் தன்னுடன் சாத் கூறியது அவனது நினைவுக்கு வந்தது.

'இரவோடு இரவாக அந்தப் புதைகுழிகளைத் தோண்டி தடயங்களையும் எச்சங்களையும் அழித்தொழித்து விடலாமா?' எண்ணங்கள் சங்கிலிக் கோர்வையாய் மனதை அரிக்க நித்திராதேவி நிரந்தரமாக விடைபெற்றுக் கொண்டிருந்தாள். 'ஐயோ.. நான் உடனடியாகத் தூங்க வேண்டும்' ஜயந்த பிரார்த்தித்தான், தூக்குக் கயிற்றிலா? யாரோ கிண்டலாகக் கேட்பது போல் இருந்தது.

திடீரென அபாய ஒலி....

'போராளிகள் சுற்றி வளைத்து விட்டார்களா.... ஓ... மகே.. அம்மே...'

எல்லோரும் எழுந்து ஆயுத பாணிகளாகி கட்டளை பீடத்துக்கு விரைந்தனர்.

மேலதிகாரி சொன்னார்... 'பயப்படாதீர்கள் புலிகள் என்று கிலி கொள்ளாதீர்கள் ....துவக்குகளை வைத்துவிட்டு, மண்வெட்டி, பிக்கான், அலவாங்குகளை எடுத்துக் கொண்டு வாருங்கள்.'

'.....'

'புதைகுழிகளைத் தோண்டி தடயங்களை அகற்ற வேண்டும். '

ஜயந்தவின் மனதில் நிம்மதிப் பேரலை வீசியது. சுறுசுறுப்பாகப் புறப்பட்டார்கள். அந்த இளம் மாணவியைப் புதைத்த இடம் அவனுக்கு நன்றாக ஞாபகமிருந்தது.

அந்த நிலைக்காவும் இரவில் அவனும் சில சிப்பாய்களும் புதைகுழியை நோக்கி நடந்தனர். 'இதோ.. இதிலே தான் புதைத்தோம்.' சாத் காட்டிக்காட்ட ஜயந்தவும் அதனை ஆமோதித்தான். மழை பெய்திருந்ததால் தோண்டுவது மிக இலகுவாக இருந்தது.

பதிதோண்டியிருப்பார்கள். மண்வெட்டியில் ஏதோ 'டக்' என்று பட்டு ஒலித்தது. ஜயந்த 'ரோச்'சை அடித்தான். எலும்புக்கூடு...

அவர்கள் பார்த்துக்கொண்டிருந்த போதே எலும்புக் கூடு அசைவது போல் இருந்தது. சிப்பாய்களின் முகத்தில் கிலி! எலும்புக்கூடு மெதுவாக எழுந்து உரத்துச் சிரித்தது. .....' ஹக்.... ஹக்....'

'ஐயோ.. மகே.. அம்மே...'

சிப்பாய்கள் அலறினார்கள். ஜயந்தவுக்கு நெஞ்சடைத்தது. இளம் பெண்ணின் எலும்புக் கூடு அட்டகாசமாக அவர்களை நெருங்கியது. அதன் கையிலே நவீன ரகத் துப்பாக்கி! ஜயந்தவும் சக சிப்பாய்களும் மண்வெட்டி பிக்கான்களை போட்டுவிட்டு ஓடத்தொடங்கினார்கள்

'மகே... அம்மே...'

'டுமீல்...டுமீல்... டுமீல்...' என்று துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. சக சிப்பாய்கள் ஒவ்வொருவராகச் சரிந்துகொண்டிருந்தார்கள். ஜயந்த 'மகே... அம்மே...' என்றபடி வேகமாக ஓடினான்.

அவனோடு உடன் படுத்திருந்த சிப்பாய்கள் அவன் போட்ட கூச்சலில் எழுந்தார்கள்.

ஜயந்த 'மகே.. அம்மே...' என்று அலறியபடி ஓடுவது தெரிந்தது. 'ஜயந்த என்ன... உனக்கென்ன நடந்தது?' என்று கேட்டபடி அவனைத் தொடர்ந்தான் சாத். அதற்கிடையில் வேகமாக ஓடிக் கொண்டிருந்த ஜயந்த முகாம் கம்பிக் வேலி தடைகள் என்று விழுந்தான்.

எல்லோரும் ஓடிவந்தார்கள். 'ஏதோ கனவு கண்டிருக்கிறான் போல இருக்குது....'

'மகே அம்மே.... புதைகுழி... புதைகுழி.. பேய்.. பேய்.. துவக்கு.. டுமீல்...' அவன் பிதற்றிக் கொண்டேயிருந்தான். கம்பிக் வேலியில் மண்டை கிழிந்து இரத்தம் ஓடிக்கொண்டிருந்தது.

டொக்டர் அழைக்கப்பட்டார். டொக்டர் வரமுன் அவன் சுயநினைவிழந்தான். விரைந்து வந்த முகாம் டொக்டர் அவனது கைநாடியை பிடித்துப் பார்த்தான். 'ஓ ஆம்... சொறி, ... ஜயந்த இறந்திட்டான்...' மறுநாள் காலையில் அவனது சடலம் நல்லடக்கத்திற்காக புதைகுழியிலிடப்பட்டது.

# கணைப்பொழுது

எமது தலைவன் பூத்த மண்ணாம் வடமராட்சியின் ஓர் கிராமமான துன்னாலையில் பிறந்து வளர்ந்தவள் தான் றத்தி. இவள் தனது கல்வியை வடமராட்சி வடஇந்து மகளிர் கல்லூரியில் கற்றுவந்தாள் இவள் கல்வியிலும் விளையாட்டிலும் சிறந்த வீராங்கனையாக திகழ்ந்தாள் இவற்றில் மட்டுமன்றி கலைநிகழ்ச்சிகளிலும் இவள் திறமை விளங்கியது. இவ்வாறாக இவளது கல்வி தொடர்கையில் எமது மண் அந்நியர்களினால் ஆக்கிரமிக்கப்பட்ட நினைவுகள் இவள் கண் முன் நிழலாடியது.

இவளின் ஒன்றுவிட்ட அக்காவான கப்டன் லீமாவும் இவளும் ஆருயிர் சகோதரிகள் இவர்களைப்பார்ப்பவர்கள் எவரும் உடன் பிறப்புக்கள் என்று தான் கூறுவார்கள் அப்படி ஒரு பாசப் பிணைப்பில் தான் இருவரும் வளர்ந்தவர்கள் இருவரும் வீட்டில் யார் முதல் இயக்கத்துக்கு செல்வது என்று சண்டைபிடிப்பார்கள் கப்டன். லீமா கூறுவார் "சுபா நீ நில் நான் போறன் நீ வீட்டில ஒரே பிள்ளை' என்று அதற்கு றத்தியின் பதிலோ "இல்லையக்கா நான் போறன் நீங்கள் நில்லுங்கோ அன்ரி பாவம் என இருவருக்கும் வாக்கு வாதம் தொடரும்.

1990ன் முற்பகுதியில் ஒரு நாள் காலை 8 மணியளவில் கப்டன். லீமா தனது பாசமான சகோதரிக்கும் கூறாது எல்லோருக்கும் மடல் எழுதிவைத்துவிட்டு தாய் மண்ணைக் காக்க பயிற்சிப்பாசறை நோக்கிச் செல்கின்றாள். லீமாவின் தாயார் அழுதவண்ணம் இருக்க அன்று காலை 10 மணிக்கு "அன்ரி அழாதேங்கோ நான் அக்காவை பார்த்துக் கொண்டு வாறன் என்று கூறி விட்டு தானும் தாயகப் போரில் இணைந்து கொள்ள விரைகின்றாள். ஆம் இருவரும் மகளிர் படையணியின் ஏழாவது பயிற்சி முகாமில் தமது பயிற்சிகளை முடித்தார்கள் பின் இருவரும் வெவ்வேறு கடமைகளுக்காக அனுப்பப்படுகின்றனர்.

கப்டன் லீமா 1991ல் ஆனையிறவுச்சமரில் வீரகாவியம் ஆகின்றாள் இச் சமரில் றத்தி மிகவும் நிதானத்துடனும் முகாமை அழிக்க வேண்டும் என்ற உறுதியுடனும் தனது குழுவையும் நகர்த்தி தானும் நகர்கின்றாள். குண்டுமாரி பொழியும் வேளைதனில் லீமாவின் உடன் பிறப்பென பாசம் வைத்த றத்தியின் உடலையும் குண்டு பதம் பார்த்து குருதி சொரியவைத்தது. அவள் மயக்க மடைந்த நிலையில் யாழ். வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டாள்.

அங்கு மயக்கம் தெளிந்தவுடன் "என்ரை அக்கா ஒரு பிரச்சினையும் இல்லாமல் நிக்கிறாவா' என அருகில் நின்ற தோழியிடம் கேட்கின்றாள் தோழிகள் இவளின் பாச அக்காவின் இழப்பை இப்போது எப்படிக்கூறுவது என நினைத்து பின் ஒருவாறு தயங்கித் தயங்கி சகோதரியின் இழப்பை தோழி கூறுகிறாள் இவளின் குரல் மிகவும் உறுதியுடன் பின் வருமாறு ஒலிக்கின்றது. "என்ரை காயத்தை வேளைக்கு மாத்தி விடுங்கோ என்ரை அக்காவை சுட்டவனோடை நான்போய் சண்டை பிடிச்சு, சுடுவன்' என்று பின் இவளின் காயம் மாறினாலும் கை ஒன்று இயலாமல் போனது இவளது திறமையைப் பார்த்த மருத்துவப் பொறுப்பாளர் "றத்தி நீங்க மருத்துவப் பிரிவில கொஞ்ச நாளைக்கு நிர்வாக வேலை செய்யுங்கோ' என்று கூறினார் அதற்கு அவள் "நான் மாட்டன் எனக்கு கை ஏலும் என்னை சண்டைக்கு விடுங்கோ' எனக் கேட்டு சண்டைபிடித்தாள் பின் எல்லோரின் வற்புறுத்தலினாலும் கொஞ்சக் காலம் செய்கிறேன் என்று தனது கடமையைத் தொடர்கிறாள் இவளின் மனமோ மிகவும் இளகிய மனம் மற்றவர்கள் துன்புறுவதைப் பார்த்துக் கொண்டிருக்கும் மனநிலை இவளுக்கு இல்லை அத்துடன் மிகவும் நகைச்சுவையாக கதைகள் கூறி எல்லோரையும் சிரிக்க வைப்பாள் இவளுக்கு கையுடன் வாயிலும் காயம் ஏற்பட்டு அதற்கு தையல் போடப்பட்டு இருந்தது.





## லெப். கேணல் றத்தி

நோயாளர் தங்களுக்கு என்ன விருப்பமான உணவு கேட்டாலும் உடன் எங்கு சென்றாவது வாங்கி வந்து கொடுப்பாள். இவளின் பணி மருத்துவப்பிரிவில் தொடர்கையில் எமது தளபதியால் புதிய போராளிகளுக்கு பயிற்சி வழங்க என பயிற்சி ஆசிரியராக இவள் நியமிக்கப்படுகிறாள் புதிய போராளிகளை மிகவும் சிறந்த போராளிகளாகவும் உறுதியுடையவர்களாகவும் மிகவும் கண்டிப்புடன் வளர்த்தாள். பின் தான் சண்டைக்கு போக வேண்டும் என்று கேட்டு பல சண்டைகளில் பங்கு பற்றுகிறாள். இப்படியாக முல்லைச்சமரிலும் தனது குழுவுடன் இவளும் மிகவும் ஆவேசத்துடன் முன்னேறுகின்றாள். இறுதி மட்டும் இவள் சண்டை செய்கிறாள் இடையில் எமது விசேட தளபதி வோக்கித் தொடர்பு கொண்டு உன்ரை பக்கம் என்ன மாதிரி றத்தி என்று கேட்க "அக்கா நான் ஆமியை முன்னேற விடமாட்டன் அவன் அப்படி முன்னேறி வாற தென்டா என்ரை வொடியைத் தாண்டித்தான் வருவான் என்று மிகவும் உறுதியுடன் கூறுகிறாள்.

முல்லைச்சமரில் இவள் தனது முழுத்திறனையும் வெளிப்படுத்தினாள் இவளின் திறமைகளையும் வழிநடத்தும் ஆற்றலையும் கண்ட விசேட தளபதி இவளை துணைத் தளபதியாய் நியமிக்கிறார். இவளின் திறமைகள் மென் மேலும் வளர்ச்சியடைந்த வண்ணம் இருந்தன, "ஜயசிக்குறுய்" படையெடுப்புத் துருப்புக்கள் மீதும் நெடுங்கேணிப்பகுதியில் 13.03.1997 அன்று இவளின் அணி மிகவும் உக்கிரமாக சண்டை செய்கிறது இவள் ஓடி ஓடி சகல நிலைகளுக்கும் சென்று எல்லாவற்றையும் நேரடியாகக் கவனித்து சண்டை செய்கிறாள். மிகவும் ஆவேசத்துடனும் வேகத்துடனும் முன்னேறிவருகையில் உடலை எதிரியின் குண்டுகள் பதம் பார்த்தன. "என்னை ஒருவரும் தூக்க வேணாம் ஆமி வாறான் அடியுங்கோ' என்று கூறியவாறு தாயகப்பற்றுடன் குருதி சிந்த தாய் மண்ணில் தலைசாய்த்து முத்தமிடுகிறாள்.

எழுதியவர் - போராளி அ. பூரணி.

# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் இருபத்தெட்டு

தொடர்ச்சி...

நாட்கள் இப்போதும் சென்று கொண்டிருந்தன. ஆனால், இப்போது வித்தியாசமாகப் போய்க் கொண்டிருந்தன. இப்பவும் அவன் மௌனமாகவும், பிடிவாதமான மௌனத்துக்குள்ளும் ஆழ்ந்திருந்தான். ஆனால், இப்போதெல்லாம், வெறுப்பிலும், மரணத்திலும் மூழ்கியிருந்த அவன் உணர்வுகள், சிறிது வேறு விடயங்களிலும் அலையாகத் தொடங்கியிருந்தன. பக்கத்தில் இருந்த விளையாட்டு மைதானத்தில் குழந்தைகளோடு அவள் பேசும் குரல் கேட்டது. ஜன்னலோரத்தில் அவன் இருந்த இடம் வரையிலும் இக்குரல்கள் அவளைச் சந்தித்துப் பேசும் வரை கேட்கவே கேட்காமல் இருந்தது. அவனுக்குப் புதுமையான காரியமாகத் தோன்றியது.

ஒருநாள் டொவ், முட்கம்பிகளுக்கு அருகே நின்று தேடுதல் வெளிச்சக் கதிர்கள் கூடாரங்களை அரவணைத்துச் செல்வதைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் அப்படி அடிக்கடி நினைப்பதுண்டு. நித்திரை செய்வதும் இன்னமும் வேம்பாய் கசந்தது. விளையாட்டு மைதானத்தில் பாலமாக்குகள், ஒரு பாசறைத் தீயை (Camp Fire) வளர்த்திருந்தனர். அதனைச் சுற்றி ஆடலும், பாடலும் நிகழ்ந்துகொண்டிருந்தன. முன்பெல்லாம் அவன் அந்தப் பாடல்களை மீட்டாளர் குழுக் கூட்டங்களில் பாடுவான். ஆனால், இப்போது, அவற்றைக் கேட்க விரும்பவில்லை. ஏனெனில், அப்பொழுது மண்டெக், ரோபேக்கா, நத் எல்லோரும் அவனுடன் இருந்தனர்.

"ஹெலோ டொவ்."

கூடாரத்தைச் சுற்றித் திரும்பிய டொவ், தன்னருகே நின்றுகொண்டிருந்த கரேனின் மங்கலாகத் தெரிந்த உருவத்தைக் கண்டான். அவளுடைய நீண்ட கூந்தல் மென்மையாக வீசிய காற்றில் அலை பாய்ந்து கொண்டிருந்தது. ஒரு சால்வையால் அவள் தோளைச் சுற்றி இறுக்கிக் கொண்டிருந்தாள். "என்னோடு பாசறைத் தீக்கு வருகிறாயா?" அண்மையில் வந்து நின்றபடி அவள் கேட்டாள். அவன் திரும்பிக் கொண்டான்.

"நீ என்னை நேசிக்கிறாய் அல்லவா? நீ என்னோடு பேசலாமே. நீ ஏன் பாடசாலைக்கு வந்து எங்களோடு சேர்ந்து கொள்ளக் கூடாது?"

அவன் இல்லை எனத் தலை ஆட்டினான்.

"டொவ்." அவள் முணுமுணுத்தாள். கலங்கிய கண்களுடன் திரும்பி அவளைப் பார்த்தான்.

"பாவம் நீ டொவ் மடையா.. நீயும் மற்றவர்களைப் போலத்தான் நீ அழகாகக் கதைக்கிறாய் அவ்வளவுதான்.."

உயர்ந்த குரலில் கதறிய அவன் அவளைப் பிடித்துக் கைகளை கழுத்தில் வைத்து விரல்களால் கழுத்தை சிறிது நெரித்தான்.

"என்னை விடு என்னை சும்மா விடு.."

கரேன் இப்போது அவனுடைய கண்களை நேராக உற்று நோக்கியபடி "உன்னுடைய கைகளை இந்தக் கணமே என் கழுத்தை விட்டு எடு" கட்டளையிடுவது போல் சொன்னாள்.

அவனுடைய கைகள் தாமாகவே கீழே விழுந்தன. "நான் உன்னைப் பயமுறுத்தவே நினைத்தேன். உனக்குத் தீங்கு விளைவிக்க நினைக்கவில்லை."

"நீ என்னை ஒன்றும் பயப்படுத்தவில்லை" சொல்லிவிட்டு அவள் விடுவிடுவென நடந்துபோய்விட்டாள். ஒரு வாரம் வரை கரேன் அவனைப் பார்க்கவோ, அவனோடு பேசவோ இல்லை. அவன் அமைதியிழந்து தவித்தான். அவனால் இப்போதெல்லாம் பிடிவாதமான மௌனத்தில் மூழ்கியிருக்க முடியவில்லை. முன்னும் பின்னுமாக நாள் முழுவதும் நடந்தான். இந்தப் பெண்ணை என்னுடைய நினைவுகளில் ஊடுருவ ஏன் அனுமதித்தேன். என்னுடைய நினைவுகளோடு தனித்திருந்திருக்கலாமே, இப்போ என்னால் யோசிக்கக்கூட முடியவில்லை. தன்னுள்ளேயே நொந்துகொண்டான் டொவ்.

ஒருநாள் கரேன் விளையாட்டு மைதானத்தில் நின்றுகொண்டிருந்தபோது, விளையாடிக்கொண்டிருந்த அவள் பொறுப்பில் இருந்த குழந்தை ஒன்று, கீழே விழுந்துவிட்டு, அழத்தொடங்கியது. அவள் அவனருகில் மண்டியிட்டு, அரவணைத்து அவன் அழுகையை மாற்ற முயன்றாள். ஏதோ உணர்வில் நிமிர்ந்து பார்த்தவள், டொவ் தன்னருகே நிற்பதைக் கண்டாள்.

"ஹெலோ.." சொல்லிவிட்டு விரைவாகத்திரும்பி நடந்தான்.

அவனை அவன் பாட்டில் விட்டு விடும்படி சொன்ன பலரின் எச்சரிக்கைகளையும் மீறி, அவனைச் சுற்றியிருந்த இருளை ஊடுருவதில் தான் வெற்றிபெற்றுவிட்டதை கரேன் அறிந்திருந்தாள். மற்றவர்களோடு கதைக்கவும், தொடர்பு கொள்ளவும் அவன் ஏங்குவதையும், அவனுடைய ஹெலோ தன் தவறுக்கு மன்னிப்புக் கோரும் பாணியிலானது என்றும் அவள் உணர்ந்திருந்தாள்.

சில தினங்களுக்குப் பிறகு தன்னுடைய கட்டிலின் மேல் ஒரு சித்திரத்தைக் கண்டாள், அதில் முட்கம்பி வேலியின் பின்னணியில் ஒரு பெண் ஒரு குழந்தையைத் தழுவிக்கொண்டிருக்கும் சித்திரம் இருந்தது. அவள் எழுந்து டொவ்வின் கூடாரத்துக்குச் சென்றாள். அவளைக் கண்டதும் அவன் மறுபக்கம் திரும்பிக் கொண்டான்.

"நீ ஒரு நல்ல சித்திரக் கலைஞன்." கரேன் சொன்னாள்.

நான் அப்படித்தான் இருக்க வேண்டும், ஜோர்ஜ் வாஷிங்டனும், லிங்கனும் கீறுவது என் விசேட திறமைகளாகும். சொல்லிவிட்டுத் தனது படுக்கையில் இடைஞ்சல் பட்டுக்கொண்டே அமர்ந்தவன் தன் உதடுகளைக் கடித்துக் கொண்டான். கரேன் அவன் அருகில் அமர்ந்தாள். அவனுடைய சகோதரிகளைத் தவிர வேறு பெண்கள் அருகே இவ்வளவு நெருங்கி இருந்ததில்லை. அவளுடைய விரல் ஒன்று அவன் இடது கரத்திலிருந்த பச்சை குத்தப்பட்ட நீல நிற இலக்கங்களின் மேல் ஊர்ந்தது.

"ஓச்விற்சா?"

"நீ ஏன் என்னைப்பற்றிக் கவலைப்படுகிறாய்?"


"உன்னை நான் விரும்பக்கூடும் என்று எப்போதாவது நினைத்ததுண்டா?"

"என்னை.. விரும்ப.."

ம்ம்..ம்.. நீ சிடுசிடுக்காமல் இருக்கும்போது மிக அழகாக இருக்கிறாய். அது வெகு சொற்பமாகவே நிகழ்கிறது என்பதை நான் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். நீ குரைக்காதபோது உனக்கு ஒரு அற்புதமான குரல் இருக்கிறது."

அவனுடைய உதடுகள் சிறிது நடுங்கின.

"எனக்கு எனக்கு உன்னில் விருப்பம் தான்.. நீ மற்ற எல்லோரையும் போல் அல்ல. நீ என்னைப் புரிந்து கொண்டிருக்கிறாய். என்னுடைய சகோதரன் மண்டெக்கும் என்னைப் புரிந்து கொண்டிருந்தான்."



**லியோன் யூறிஸ்**

"உனக்கு எத்தனை வயது?"

"பதினேழு" சொன்னவன் பாய்ந்து எழுந்து கத்தினான். இந்தக் கேடு கெட்ட பிரிட்டிஷ்காரர்களை நான் வெறுக்கிறேன். இவர்களொன்றும் ஜேர்மனியர்களை விட நல்லவர்களில்லை.

"டொவ்"

அவனுடைய திடீர் கொந்தளிப்பு, தொடங்கியது போலவே விரைவாக மடிந்துபோனது. ஆயினும், அது ஒரு ஆரம்பமே. அடைத்து வைத்திருந்த உணர்ச்சி வெள்ளங்கள் மடைதிறந்து பாயத் தொடங்கிவிட்டது. கடந்த ஒரு வருடத்துக்கு மேலான காலத்தில் ஓரிரு வார்த்தைகட்கு அதிகமாக அவன் பேசியது இன்றுதான். அவன் தனது அந்த இருள் உலகத்துள் மீண்டும் ஆழ்ந்துபோவதை கரேன் அவதானித்துக் கொண்டிருந்தாள்.

அவள் மென்மையான இயல்புகளைக் கொண்டிருந்ததும், அவன் சொல்வதைப் பொறுமையுடன் கேட்க ஆயத்தமாக இருந்ததும், அவனை நன்றாகப் புரிந்துகொண்டதும், அடிக்கடி அவளைச் சந்திக்க அவனைத் தூண்டின. அவளைச் சந்திக்கும் போதெல்லாம், அமைதியாக சில நேரத்துக்குக் கதைத்துக்கொண்டிருப்பவன், திடீரென வெறுப்பு உமிழும் வார்த்தைகளைக் கொட்டிவிட்டு பழையபடி தன்னுள்ளேயே ஆழ்ந்து போவான்.

கரேன் அவனோடு தன் விஷயங்களைப் பகிர்ந்து கொண்டதோடு எப்படித் தன் தந்தையைப் பலஸ்தீனத்தில் சந்திக்க ஏங்கிக் கொண்டிருக்கிறாள் என்றும் உணர்த்தினாள். அவள் ஹான்சன் தம்பதியினரை விட்டு விலகிய பின் இளைஞர்களோடு கடுமையாக உழைத்ததன் பயனாக ஒருவரோடும் நெருங்கிய சிநேகிதம் கொண்டிருக்கவில்லை. டொவ்வுக்குத் தன் விஷயங்களை அவள் தன்னோடு பகிர்ந்து கொண்டது பற்றி மிகவும் பெருமைப்பட்டுக் கொண்டான். அது வினோதமான நிகழ்வாக இருந்தாலும், அவளோடு கதைப்பதில் அவன் மிகவும் ஆத்மார்த்தமான மகிழ்ச்சியை அனுபவித்தான்.

ஒருநாள் அந்த அற்புதமான காரியம் நடந்தது.

டொவ் லண்டவ் மறுபடியும் சிரித்தான்.

அவர்கள் இருவரும் கதைத்தபோது, இனிய விஷயங்களைப் பற்றிக் கதைக்கவே டொவ் விரும்பினான். அவள் கதைக்கும் விதம்.. ஹான்சன் தம்பதியினரைப்பற்றி.. டென்மார்க் மக்களைப் பற்றி.. தன் தந்தையுடன் போய்ச் சேர்வது பற்றிய எதிர்பார்ப்புகள்.. இவைகளைப் பற்றி அவள் கதைக்கும் விதத்திலேயே அவனுடன் தன்னைப் பற்றிய விஷயங்களைக் கதைக்க மிகவும் விரும்பினான். ஆனால், அப்படியான இனிமையான விடயங்கள் எதுவும் அவன் ஞாபகத்துக்கு வரவில்லை. 1939-ம் ஆண்டுக்கு முற்பட்ட போருக்கு முன்னான காலம் வெகுகாலத்துக்கு முன்பென்பதால், அக்காலத்தில் நிகழ்ந்தவை எவையும் அவன் ஞாபகத்தில் இல்லை.

டொவ் சொல்லாத எந்த விஷயத்தைப் பற்றியும், அவள் அவனோடு கதைப்பதில்லை. அவள் ஓச்விற்ஸ், யூதசேரி போன்றவற்றைப் பற்றிக் கேட்கவே இல்லை.

பல வாரங்களுக்குப் பிறகு ஒரு நாள், ஒரு கோரிக்கையோடு கரேன் அவனைத் தேடி வந்தாள். "டொவ், எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்."

டொவ் உடனடியாகவே சந்தேகப்படத் தொடங்கினான்.

மொசாட் ஆட்கள் நீ ஓச்விற்சில் இருந்ததாகவும், நீ ஒரு திறமையான போலி நோட்டுத் தயாரிப்பாளன் எனவும் அறிந்து கொண்டிருக்கிறார்கள்.

"அதற்காக"

"பலஸ்தீனத்தில் இருந்து புதிதாக ஒரு மனிதன் வந்திருக்கிறார். அவர் உன்னோடு கதைக்க விரும்புவதாக ஜோஷப் யார்க்கோனி கூறினார். அவருடைய பெயர், அரி பென் கானான். அவருக்கு கடவுச்சீட்டுகளும் ஆவணங்களும் தேவையாக இருக்கிறதாம். உன்னுடைய சேவையைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறார்.

அப்படியானால், அதுதான் விஷயம். அதற்காகத்தான் நீ என்னுடன் சிநேகிதம் கொண்டாய். அதன் மூலம் என்னை வேலை செய்விக்க இல்லையா?"

"வாயை மூடு டொவ். சொல்வதை நீயே நம்பவில்லை என்று எனக்குத் தெரியும். "

"சரி, அவர்களுக்கு என் சேவை அவ்வளவு தேவையானால் அவர்களே என்னிடம் கேட்டிருக்கலாமே?" முணுமுணுத்தான் டொவ்.

"நீ யாரோடும் பேசாதபோது அவர்கள் உன்னிடம் எப்படிக் கேட்கலாம்?"

"ஏனெனில் அவர்கள் உனக்காக வேலை செய்கிறார்கள்."

"வேலை செய்கிறார்கள்தான். ஆனால், அது தங்களைக் காப்பாற்றவே"

தொடரும்...







# அம்மாவின் பூக்குஞ்சுகள்

அம்மா அழுதாள்
"என்ர "பூக்குஞ்சின்ர
முகத்தைக்
காட்டுங்கோ"
புலிப்பிள்ளை இருந்த
வயிற்றிலும்
இருக்கின்ற பெட்டியிலும்
அடித்துக் கூவினாள்.

பிண்டச் சிதைவுற்ற
சூலறைச் சிசுவாய்
அருணன் அம்மாவிடம்
வந்தான். . . . . .
இறுக்கிமூடி ஆணிதைக்கத்
பெட்டியில்,

" என்ர ஐயா! என்ர
குஞ்சு!
அம்மா கத்திறனெல்லே"
தம்பியவை!
ஒருக்காத் திறவுங்கோ"
அம்மாவின் அடிவயிற்று
ஓலத்தில்
பெட்டி அதிர்ந்தது.

மனங்கள் இளகினாலும்
பெட்டி
இறுகியேயிருந்தது.
தசைக்கந்தலாய்
அருணனை அம்மா
பார்க்கவேண்டாம்.
அம்மாவின் "பூக்குஞ்சு"
பூக்குஞ்சாகவே
இருக்கட்டும்
அவளுக்குள்.

அம்மா பாவம்!
அவள் எப்படித்
தாங்குவாள் இதை.
அம்மாவின் மடிக்கு
இது இரண்டாவது
இடி.
அம்மாவின்
புலிப்பெண்ணும்
இப்படித்தான்.
அருணன்
மூடுண்ட
பெட்டியிலாவது
வந்தான்.
அவள் வரவேயில்லை
அவள் செத்த
துடக்குத்தான்
வீட்டுக்கு வந்தது.

❀ ஆனையிறவுச்சமரில் (1990) வீரச்சாவடைந்த வீமாவின் உடல் கிடைக்கவில்லை. கடற்சமர் ஒன்றில் (1998) வீரச்சாவடைந்த அருணன் கிடைத்தான். ஆனால் பார்க்கும்படியாய் இல்லை.

## இரு வாரத்துக்கு ஒருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

### அன்புச் சகோதரமே தமிழீழப் புலம்பெயர் உடன்பிறப்பே!

புத்த வருடம் 2939-ல் உடுவெப் மாதத்து பௌர்ணமியில் யாப்பா பட்டினம் மீது மீண்டும் ஆட்சி அதிகாரம் நிலைநாட்டப் பட்டது. இதுதான் ரத்வத்தை சந்திரிகா வுக்கு சிவப்பு வெல்வெட் பேழையில் வைத்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற் றிய வெற்றி விழாக் கொண்டாட்டத்தில் அளித்த பட்டயம். சிங்களத்து இராணி சந்திரிகாவும் கி.பி 1450ல் யாழ்ப்பாணத் தைக் கைப்பற்றி 17 ஆண்டுகள் ஆண்ட தாக கூறப்படும் சபுமால் குமாரய (செண்பகப்பெருமாள்) வுக்குப் பின் தான் யாழ்ப்பாணத்தின் சிங்கள அரசி யாகி விட்டதாக பெருமகிழ்வுற்றாள்.

கடந்த மாதம் அன்னை வேளாங்கன் னியின் திருவுருவுக்கும் மடுமாதாவின் அருள் உருவுக்கும் நடுவே சந்திரிகா சிங்களத் தேவதையின் படம் போடப் பட்டு மடுவினை மீட்ட வீராங்கனையாக போற்றப்பட்ட போஸ்டர்கள் கொழும்பு முழுவதும் ஒட்டப்பட்டிருந்தன.

இதற்கு முன்னர் ஜே.ஆர் ஜயவர்த்த னாவும் தன்னை கோட்டே அரசின் வாரி சாக 204வது அரசாக குறித்து மகிழ்ந் ததை இந்நேரத்தில் நினைவு கூறத்தக்கது.

இவை எல்லாம் சிங்களத் தலைமை கள் முடியாட்சிக் கால நினைவுகளுடன் தமிழர்களைத் தாங்கள் அடிமை கொள்வ தாக குடிக்கும் மமதையின் வெளிப்பா டுகள்.


ஆனால் ஐரோப்பிய அமெரிக்க அர சாங்கங்கள் இலங்கைத்தீவில் நீண்ட காலமாக ஜனநாயக மரபுகள் போற்றப் பட்டு வருவதால் தெற்காசியாவில் ஜன நாயகத்தின் முன்னோடியாக சிறிலங் காவை கருதி அங்கு ஜனநாயகம் நிலைக்க சிறிலங்காவுக்கு உதவவேண்டும் என்கி றார்கள்.

சிங்களத் தலைமைகள் முடியாட்சி மகிழ்வில் இருக்க ஐரோப்பிய அமெரிக்க தலைமைகள் தங்கள் தங்கள் இராணுவ சந்தை நலன்களை கருத்தில் கொண்டு சிறிலங்காவுக்கு செய்யும் உதவிகளுக்கு ஜனநாயக நியாயப்படுத்தல் பேசி மகிழ் கிறார்கள். போதாக் குறைக்கு சிறிலங்கா வில் மனித உரிமைகள் முன்னேற்றம் காண்பதாக ஐரோப்பிய ஒன்றிய அறிக்கை ஒன்று புழுக்காத போகிறது. அதே வேளை செம்மணி மரணக்குழிகளுக்கு போட்டியாக துரையப்பா அரங்கில் சிறிலங்கா படைகள் கொன்று போட்ட தமிழர்களின் எலும்புக்கூடுகள் வெளிக் கிளம்புகின்றன. ஆனால் ஐரோப்பிய ஒன்றியம் மனித உரிமைகளில் முன் னேற்றம் பேசுகிறது.

இவையெல்லாம் ஏன் கையே எனக்கு உதவி என்ற உண்மையையே எனக்கு நினைவூட்டுகின்றன. எனக்கு ஒரு விஷ யம் தெரியும் தேசியத் தலைவர் மேதகு பிரபாக ரன் இருக்கிறார். அவர் சிங்களத்து இராணி யாழ்ப்பாணத்தை யாப்பா பட்டினமாக ஆள அனுமதிக்க மாட்டார் என்பது எனக் குத் தெரியும். நாம் கொஞ்சம் அதிகம் நிதி அளித்தால் எல்லாம் சரிவரும். அது வரை கொஞ்சக் காலத்துக்கு சிங்களத்து இராணி சிரித்திருக்கட்டும்.

அன்பின் ஆச்சியார்
(10.04.1999)


சாதராண சமரல்ல
சமர்களுக்கெல்லாம் தாய்ச் சமராக
எமது மண்ணில் நிகழ்ந்த பெரும் சமர்
ஜயசுக்குறுயி எதிர்ச்சமர்
ஒளிமிழைப்பேழையாய் வெளிவந்துவிட்டது.




வெளியீடு
தமிழீழ விடுதலைப் புலிகள்
அனைத்துலகச் செயலகம்

# மழைக்கொதுங்கிய திண்ணையிலிருந்து எனக்கிது என்றானாம் இராப்பிச்சைக்காரன்.

[illegible]

- யாழ்ப்பாண வைபவமாலை

[illegible]

- கைலாயமாலை

* * *

'சிங்களவருக்கு மட்டுமே சிறிலங்கா
வந்தேறு குடிகளுக்கென்ன வழங்கவுண்டு'
இது கன்னாபின்னாவெனக் கத்தி
சன்னதமாடும் 'சாது' கூறியதல்ல.
தென்னாபிரிக்காவின் தலைநகர் நின்று
அதிகார அரசாங்க என அங்கீகரிக்கப்பட்ட
திமிரிலுருவான சந்திரிகாவின் திருவாய் மலர்வு.
பேசிய வார்த்தைகளுக்குப் பூடகப் போர்வையிட்டு
விசிய அம்பு
அம்பின் நுனியிலும் பூசியிருந்தது நஞ்சு.
ஒட்டணை நீவிய வார்த்தைகளை
இனி உருமறைப்புச் செய்து
குற்றத்தை குறைத்துக் கொள்ள முயலலாம்.
எனினும் எமக்கு
எய்த அம்புதைத்த காயம் பெரிது.
காயத்திருந்து பெய்த குருதி அதிகம்.
வெய்ய வார்த்தைகள் தந்த வேதனை வலிது.
கருக்கொளத் தைத்த கடுவார்த்தைகளால்
திடுக்குற்றுப் போனோம்.
'சமாதான தேவதை' யின் 'சரித்திரப்பிரகடன'த்தின் பின்னும்
அவர் மாளிகையின் அடிப்படிவரை சென்று
சட்டி கழுவிக் கொடுக்கின்றன. சில 'தமிழுகள்'
தாயின் சேலையுருவிய 'சண்டிராணி'யின்
வாய்மொழி இவர்களுக்கு 'மந்திர உச்சாடனம்.'
தாம் புரந்த தாம்பண்களின் உழவுக்கு நல்லதென
கமக்காரி கண்டுபிடித்துள்ளாள்.
வைக்கலோடு வயல்முழுதும் உழுதாச்சு.
மூச்சிறைக்க உழுகின்ற சில 'நூறேசிமாடுகள்'
உழுது தொலைக்கட்டும்.
மானவேறுத்த மனித மரங்களெல்லாம்
என இரைதின்று இளைப்பாறுகின்றன.
ஆட்டித் தொலைக்கட்டும்.
தமிழனாய்ப் பிறந்ததே பாவமெனச்
சரித்திரம் தொடர்ந்தும் எழுதுகின்றது.
நக்கிப் பிழைக்கும் நரகல்கள்
எக்கேடாயினும் கெட்டுத் தொலைக்கட்டும்.
சிங்கள தேசத்தின் சிமந்தபுத்திரியே!
வந்தேறு குடிகளென்ற வாயே!
சாந்த சொரூபியெனத் தலைமாற்றிக் கொண்டவளே!
சந்தைக்குச் சரக்குவிற்க வந்த
வந்தேறு குடிகளா எங்கள் வம்சம்?
மழைக்கொதுங்கிய திண்ணையிலிருந்து
எனக்கிது என்றானாம் இராப்பிச்சைக்காரன்.
கூலிக்கு வேலியடைக்கவந்த குடிகாரன்
வேலிதனக்கென்று வழக்காடப் போனானாம்.
காற்றாலொதுங்கிக் கரைதொட்ட பரம்பரையா
பூர்வீகம் பற்றிப் பிளாத்துவது?
காலாதிகாலமதாய் கையளைந்த எம்மண்ணில்
'லாலா' தாலருந்துவந்த 'லைலா'வா ஆடுவது?
பண்டிருந்து நாங்கள் படுத்தெழுந்த பூமியதை
ஓண்டவந்த பிடாரி உரிமைகொண்டாடுவதா?
அடியடா சக்கை
அம்மன் கோயில் புக்கை
இலங்கை முழுதும் எங்களுக்கே சொந்தமெனப்
புலம்பித் திரிந்தோமா நாங்கள்?
வந்தேறு குடிகளென வரலாற்றைத் திரித்தோமா?
உங்களுக்கும் மண்ணில் உரிமையில்லை என்றோமா?
இல்லையே.
இலங்கை இருநாடுகள் கொண்ட ஒரு தீவு.
இதுதானே நாம்கேட்கும் தீர்வு
'வெண்தாமரைக்காரிக்கு' இது ஏன் விளங்கவில்லை.
எங்களுக்குச் சொந்தமானதில் நாங்களும்
உங்களுக்கு சொந்தமானதில் நீங்களும்
சந்தோஷம் கொள்ளத்தானே
அன்று 'சமஷ்டி' கேட்டான் தமிழன்.
உன்தந்தை தந்திருந்தால்
இந்தளவு ரத்தம் சிந்தவேண்டி வந்திராது.
தந்தை தரவில்லை
தாயாரும் தரவில்லை,
அடுத்தடுத்து அரியணையேறிய யாரும் தரவில்லை.
அம்மணி!
'பெரியபடிப்பெல்லாம்' பிரான்ஸிற் படித்தவளே!
அனைத்தும் நமதென்று வாதிடும்
அறியாமை எமக்கில்லை.
ஊரான் வயலையெல்லாம் உழுமாசை எமக்கில்லை.




—வியாசன்—

நாமிருக்கும் பூமி நமக்கு.
நீரிருக்கும் பூமி உமக்கு.
நல்ல அயலவராக நாமிருப்போம்.
முந்தைக் குடியென்றும்
வந்தேறு குடிகளென்றும்,
பிற்றலும், புலம்பலும் உனக்குப் பெருமைதராது.
நேற்றிருந்த வாழ்விழந்து நெடு மூச்சுவிட்ட எங்களுக்கு
தேற்றுதலளிப்பாயெனத் தேறியிருந்த போதுதான்
நீ சூற்றுவனாகக் குதித்தாய்.
குடிகலைத்தாய்.
நாற்று வயலையெல்லாம் நாசமுறச் செய்தாய்.
இன்று, வந்தேறு குடிகளென வரலாற்றைத் திரிக்கின்றாய்
சமாதான நர்த்தகியெனச் சதங்கை கட்டிய நீயும்
கசங்கிப்போன பழைய உடுப்புடன்தானே
காட்சி தருகின்றாய்?
இந்த மாங்கனித்தீவு தீவாக முன்னரே
நாங்களிங்கு வாழ்ந்திருந்த கூட்டத்தின் வம்சம்
இங்கு முளைத்த முதல் மரத்துக்கே நீரூற்றியவர்.
ஆறுகளுக்கு அணைகட்டிய ஆரம்பமனிதர்.
கந்தரோடையிற்கிடக்கும் 'ஈமத்தாழி' களுக்குச்
சொந்தக்காரர்.
முதுமனிதகூட்டத்தின் முற்றம் இதுவானால்
அதுவும் எமதாகும்.
'தமிழ்பௌத்தத்தை' எம்முந்தையர் சார்ந்திருந்தனர்.
சிலப்பதிகாரமும்,
மணிமேகலையும் சொல்லும் திருநகர்கள் எமதே.
கொம்பு செவியைமறைத்தல் கூடாது.
அளவுகோல் பிழையானால்
விளைவுகள் விபரீதமாகும்.
முந்தைக்குடியென்று உம்மையும்
வந்தேறுகுடிகளென்று எம்மையும் வகைபிரித்தல்
நன்றல்ல....நன்றல்ல...நன்றேயல்ல.

* * *

'துஞ்சுமேதி சுறாக்களைச் சீறிடச்
சுறாக்களோடிப் பலாக்கனி கீறியே
இஞ்சிவேலியின் மஞ்சளிற் போய்விழும்
ஈழமண்டல நாடெங்கள் நாடதே.'